உ முகுந்தன்

உ
சிவமயம்

அருணகிரிநாத சுவாமிகள்
அருளிச்செய்த

# கந்தரநுபூதி

## மூலமும்

சுழிபுரம்
திரு. க. கார்த்திகேசு யோகி அவர்கள்
செய்த

## உரையும்

வெளியீடு:
வழக்கம்பரை பஜனைச் சபையார்
காலயுத்தி] 1978 [வைகாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[பதிப்புரிமை பதிவு செய்யப்பெற்றது]

பதிப்பகம் :
திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

வழக்கம்பரை என்றவுடன் யாவர்க்கும் வழக்கம்பரை மகாமாரி அம்மன் கோயிலும், வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையும்தான் நினைவுக்கு வரும்.

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல உயர்ந்த பணிகளைச் செய்து வருவதில் முன்னின்று உழைக்கும் தொண்டர்கள் நிறைந்த சபையே வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையாகும்.

இச்சபையின், சென்றகால, நிகழ்கால, வருங்கால வேலைத்திட்டங்கள் யாவும், ஒரு கட்டுக் கோப்புக்குள் உட்பட்டுள்ளன. சென்ற வருடங்களிற் செய்யப்பட்ட பணிகள் யாவும் நல்ல பலனைக் கொடுத்துள்ளதை யாவரும் அறிவர்.

பஜனைச் சபையாரின் வெளியீடுகளுக்குத் தனியான ஒரு மதிப்பு யாவரிடமும் உள்ளது. இவ்வுண்மையை அறிந்து பலர் பல வெளியீடுகளைச் சபை மூலம் வெளியிட்டுள்ளனர். சென்ற ஆண்டும் 'அபிராமி அந்தாதி' நூல் வெளியிடப் பட்டு ஒரு சில மாதங்களில் நூல்கள் யாவும் முடிவடைந் துள்ளன.

எங்கள் பெருமதிப்பிற்கும் ஆழ்ந்த அன்பிற்கும் உரியவ ரான உயர்திரு. யோகி க. கார்த்திகேசு அவர்கள் எமது வெளியீடுகளில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி அவ்வப்போது, ஆலோசனைகள், பாராட்டுரைகள் வழங்கி வருபவராவர்.

இவர் 1971ஆம் ஆண்டு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்துமாமன்றத்தின் உதவியுடன் தமது கந்த புராண யுத்தகாண்ட உரைநூலை வெளியிட்டதை யாவ ரும் அறிவர், இந்நூல் வெளியீட்டின் மூலம் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டிய செய்தியை அறிந்து எமது சகோதர நிலையக் குரல் மூலம் மகிழ்ந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகியார் ஒரு சிறந்த உரையாசிரியர். இவரது உரையைக் கேட்பதில் ஓர் இன்பம். இவரால் எழுதப் பெற்ற உரையை வாசிப்பதில் ஒரு தனியான இன்பம் அடையலாம். புராண படலங்களில் மூழ்கித் திளைத்த இவர் முருகன் அருளால் கந்தரநுபூதிக்கும் உரை கண்டுள்ளார். யோகியாரின் கந்தரநுபூதி உரையை நூலாக வெளியிட எமக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பின்மூலம் இன்று இந்நூல் உங்கள் கைகளில் திகழ்கின்றது. இப்பணியை நிறைவேற்ற அன்னையின் அருள் ஒன்றே காரணமாகும்.

இந்நூலை வெளியிடுவதற்கு உதவிய யாவருக்கும் நன்றி சொல்வது எமது கடமையாகும். உரையைப் பரிசோதித்து வேண்டிய ஆலோசனைகள் வழங்கிய வித்துவான் பொன். முத்துக்குமாரன், **B. O. L.** அவர்கட்கும், அச்சுப் பிரதிகளை ஒப்புநோக்குவதோடு அமையாது, எமக்கு வழிகாட்டியாகவுமுள்ள முன்னாள் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு.சி. **சி**சுவலிங்கம், **B. A.** அவர்கட்கும், உரையைப் பிரதிசெய்து தருவதில் உதவிய பண்டிதர் ஆ. சேயோன், பண்டிதை பொன். பாக்கியம், மற்றும் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், ஆசிரியர் மு. தம்பிஐயா ஆகியோர்க்கும், சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய சுன்னாகம், திருமகள் அழுத்தக அதிபர், அவரது அழுத்தக ஊழியர் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதியாக இந்நூல் வெளியிடுவதற்குத் தோன்றாத் துணையாக உதவிகள் புரிந்து எங்கள் பணிக்கு ஊக்கம் கொடுத்து ஆதரவு நல்கி வரும் யாவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வழக்கம்பரை, **பஜனைச் சபையார்**

*12-5-78.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரை

## எனது உளம் கவர்ந்த உத்தமப் புலவர் யோகி கார்த்திகேசனர்

அகல் வானத்து உம்பர் உறை வான்பதியினும் இன்பம் மிக்கெய்தற்கு ஏதுவான செந்தமிழ்ப் புலவர்தம் நட்பையே பெரும் பேறு எனக் கருதும் சிறியேற்கு நல்லூழ் வசத்தால் நற்பெரும் புலவர்கள் பலருடைய தொடர்பு காலத்திற்குக் காலம் கிடைத்து வருகின்றது. அவர்களுட் சிலர் புகழ் மிக்க மேதைகள். பழுத்த நூற் புலமையோடு, சொந்தமாகச் சிந்திக்க வல்ல செழிப்பான சிந்தனையாற்றலும் கைவரப்பெற்ற அரிய திருவுடையாரே மேதைகள் வரிசைக்கு உரியர். எனது உளம் கவர்ந்த உத்தமப் புலவராம் யோகி கார்த்திகேசனர் அவர்களையும், மேதைகளுள் ஒருவராகவே மதித்து வந்திருக்கின்றேன்.

வட்டுக்கோட்டை அடைக்கலத் தோட்டத்துக் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற புராணப் படிப்பின் போதுதான் இந்தப் பெரும் புலவரை யான் முதன்முதல் சந்தித்தது. அன்று யான் இவர்பாற் கண்ட புலமையின் விரிவும், ஆழமும், செஞ்சொற் செழிப்பும் என்னைப் பெரு வியப்பில் ஆழ்த்தியதோடு, என் உள்ளத்தில் அவர் மாட்டுப் பெரியதோர் ஆர்வமுடைமையும் உதிக்கச் செய்து விட்டன.

புராணபடனங்களுக்கு உரை காண்பதும் சொல்வதும் ஒரு தனிக் கலை. அலைகொழிக்கும் ஆழ்கடலிலே மூழ்கி அழகொழுகும் முத்துக்களை எடுத்து வந்து அவனியர் முன்னே அணிபெற வைப்பது போன்றதோர், அருங் கலை அது. அருந்தமிழிலக்கியங்களிற் பரந்த பயிற்சியும், இலக்கணப் புலமையும்; சிறப்பாக மெய்கண்ட சாத்திரங் களிலும், திருமுறைகளிலும் ஆழ்ந்த தோய்வும், செஞ்

சொற்செல்வமும் வாய்க்கப்பெற்ற இவர் போன்ற ஒரு மிகச் சிலர்க்கேயன்றிப் பிறர்க்கு அது வாய்க்காது என்ற உண்மையை இவருடைய வளமார்ந்த விரிவுரைகளைக் கேட்கும்போதெல்லாம் உணரக்கூடியதாக இருந்தது.

தெள்ளூற்ற தீந்தமிழில், தனது மென்குரலோடு இன்னிசையையும் அளவாகக் கலந்து பாடல்களின் பயனை யும் நயங்களையும் இவர் சிலவேளைகளில் அள்ளி அள்ளிச் சொரியும்போது சுவையுடையார்க்கெல்லாம் மறக்க முடி யாத அரிய இன்தமிழ்த் துய்ப்பாக அது இருக்கும்.

இவர் உலகப் பற்றுக்கு அடிமையாகாத ஒரு துறவி. யாவருடைய உள்ளங்களிலும் நிறைந்துள்ள பெரும் புலவ ரான இவர் தனது புலமையைச் சிவபுண்ணியம் பெருக்கும் புனித பணிக்கே அர்ப்பணித்துள்ளார். இவர்பணி மேலும் வளர எல்லாம் வல்ல இறைவன் அருள் நல்குவாராக.

செந்தமிழ்ச் செல்வர்,
**முதலியார் சே. சின்னத்தம்பி**

வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருணகிரிநாதர் வரலாறு

முருகன் வழிபாடு தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கும் முற்பட்டதெனக் கருதப்படும் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம் முருகனைக் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வமென்று சிறப்புறக் குறிப்பிடுகின்றது, ''சேயோன் மேய மைவரை உலகமும்'' என்பது தொல்காப்பியரது கூற்றாகும்.

முருகன் தமிழ்க் கடவுள்.

"கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழாற் பகர்வோனே."

என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். முருகன் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தார் என்று நக்கீரரும், ''சங்கத் தமிழின் தலைமைப் புலவன்'' என்று குமரகுருபர சுவாமிகளும் போற்றிப் பாராட்டியுள்ளமையும் நோக்கத்தக்கது.

இத்தகைய தமிழ்மக்களின் ''தெறலருங் கடவுளும்'', ''பொருபுங்கவரும் புவியும் பரவும் குருபுங்கவனு''மாகிய தமிழ வேளின் பொருள்சேர் புகழைப் போற்றிப் பரவிய சைவச் சான்றோருள் தலைசிறந்தவர் நக்கிரரும், குமரகுருபரரும், அருணகிரிநாத சுவாமிகளுமாவர். அவர்களுள் ''வாக்கிற்கு அருணகிரி'' என்றும் ''கருணைக்கு அருணகிரி'' என்றும், ''ஐயா அருணகிரி அப்பா, உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?'' என்றும் பக்த கோடிகளாற் பரவிப் பாராட்டப்பெற்ற அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு பற்றித் தெளிவான சான்றுகள் கிடையாமை சைவத் தமிழ்மக்களது தவக்குறைவேயாகும். இவரது வரலாறுபற்றித் தண்டபாணி சுவாமிகள் இராகவ ஐயங்கார், ஸ்ரீ கோபிநாத ராயர், செங்கல் வராய பிள்ளை முதலிய பல அறிஞர்கள் ஆராய்ச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளனர். அவர்களின் முடிபுகள் முடிந்த முடிவாக இல்லாவிடினும் அடிகளாரின் வரலாற்றைப்பற்றி எழுந்துள்ள கறைபடிந்த கர்ணபரம்பரையான புனைந்துரைகளைக் களைந்து உண்மை விளக்கம் பெற உதவுகின்றன.

அருணகிரிநாதர் இற்றைக்கு 600 ஆண்டுகட்கு முன் ஆனிமாதப் பௌர்ணமியன்று மூல நட்சத்திரத்தில் தமிழகத்தில் நடுநாட்டைச் சேர்ந்ததும், பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகிய அக்கினி க்ஷேத்திரமுமாகிய திருவண்ணாமலையில் முள்ளாந்திரம் என்னும் கிராமத்தில் கல்வி கேள்விகளிற் சிறந்த கௌட பிராமணகுலத்தில் அவதரித்தார். தமது பெற்றோரை "சீலமுள தாயர் தந்தை" என்று அடிகளாரே குறிப்பிடுதலால் அவர் நல்லொழுக்கத்திற் சிறந்து விளங்கிய நற்குடிப் பிறந்தவர் என்பதும், அக்குடிப் பிறந்த அம்மை அப்பன் மனைவி மக்கள் சுற்றத்தவர்களோடு வாழ்ந்தவரென்பதும் அவர் பாடிய திருப்புகழிலிருந்தே அறிந்து கொள்ளலாம். அருணகிரியார் தென்மொழியையும் வடமொழியையும் துறைபோகக் கற்றுப் புலமை மிக்குடையரா யிருந்தாரென்றும் தேவார திருவாசகங்களையும், திருமந்திரம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை முதலிய நூல்களையும் நன்றாகக் கற்றவர் என்பதும் ஸ்ரீ இராகவ ஐயங்கார், செங்கல்வராயபிள்ளை, வெள்ளைவாரணர்,வித்துவான் ந. சுப்பையாபிள்ளை முதலிய அறிஞர்களது ஆராய்ச்சி முடிவாகும்.

இங்ஙனம் இளமையிலேயே புலமை யெய்திய அருணகிரிநாதர் அவர்கள் ஊழ்வினை வசத்தால் பொருட்பெண்டிர்பால் உறவு பூண்டு சிற்றின்பத் துறையில் எளியவரானார். இதன் விளைவாகக் கைப்பொருள் முழுமையும் இழந்து வறுமையுற்று நோய்க்கு விருந்தாகி அளப்பரும் அல்லலுற்றார். மனைவி மக்களாலும் சுற்றத்தவராலும் ஊரவர்களாலும் எள்ளி இகழப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையில் உய்யும்வழி வேறு காணாது உயிர்த்தியாகம் செய்ய முற்பட்டபொழுது அருள் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் தடுத்தாட்கொண்டமை பற்றித் தமது திருப்புகழில் பல இடங்களில் என்பு நெக்குருக எடுத்தியம்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனையவள் நகைக்க ஊரி லனைவரு நகைக்க லோக
மகளிரும் நகைக்க தாதை தமரோடும்
மனமது சலிப்ப நாய னுளமது சலிப்ப யாரும்
வசைமொழி பிதற்றி நாளு மடியேனை
அனைவரு மிழிப்ப நாடு மனவிருள் மிகுத்து நாடி
அகமதை எடுத்த சேமம் இதுவோவென்
றடியனு நினைத்து நாளு முடலுயிர் விடுத்த போதும்
அணுகிமுன் அளித்தபாதம் அருள்வாயே
............................................... "

எனவரும் திருப்புகழில் வள்ளி மணாளன் புள்ளிமயில் மீதிவர்ந்து வந்து தம்மை அன்புக் கரங்கொடுத்து ஆதரித் தமையை ஆராமையோடு அருணகிரியார் புகழுவது புலனு கும். கருணாமூர்த்தியாகிய முருகப்பெருமான் தமது அடியானை மரணத்தின் வாயினின்றும் காப்பாற்றித் தரிசனம் கொடுத்ததோடமையாது, அருணகிரியென்று பெயரும் கொடுத்து, விபூதி சாத்தி, திருவடித்தீட்சையும் நல்கி, ஆறெழுத்து மந்திரத்தை அயில் வேலால் அவர் நாவிற் பொறித்து, முத்தமிழும் போதித்தார். அத்துடன் ஜெப மாலையும் வழங்கி இறைபுகழ் பாடும்படி பணித்தருளினர். அப்பொழுது அருணகிரியார் தமது ஆற்றலின்மையைக் கூறவும் முருகனே, "முத்தைத்தரு பத்திக்கிறை ......... எனவோது" என்று அடியெடுத்துக் கொடுத்தருளினர். இங்ஙனம் அருணசலேஸ்வரரினல் ஆட்கொள்ளப்பெற்ற பின்னர் அருணகிரியார் திருத்தல யாத்திரை மேற் கொண்டு முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங் கள் தோறும் சென்று தெய்வத் தீந்தமிழ்த் திருப்புகழ் பாடியருளினர். இவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் 16,000 என்பர். அவற்றுள் இக்காலத்துக் கிடைக்கக் கூடியனவாக இருப்பவை 1324. கிடைக்கும் திருப்புகழ்ப் பாடல்களிலிருந்து இவர் கிட்டத்தட்ட 200 தலங்களைத் தரிசித்தாரென்று அறியக்கூடியதாயிருக்கின்றது. இவர் பாடிய திருத்தலங்களுள் ஈழத்துக் கதிர்காமமும் ஒன்றென் பது நம்மனோர்க்கு மகிழ்ச்சியளிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாத சுவாமிகளும் தமிழில் மகாபாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும் சமகாலத்தவரென்பது வரலாற்று ஆசிரியர்களின் முடிபாகும். அக்காலத்து வசித்த புலவர் பெருமக்களை வலிந்து வாதுக்கழைத்து, வாதிலே தோற்றவர்களின் செவிகளை அரிந்து மான பங்கம் செய்தலையே வில்லி தொழிலாகக் கொண்டிருந்தார். அருணகிரிநாதரையும் வெல்லக்கருதி திருவண்ணுமலை சேர்ந்து அரசன் முன்னிலையில் வாதிட்டார். அருணகிரி நாதர் ''கந்தரந்தாதி'' பாட வில்லிபுத்தூரர் அப் பாடல்களுக்குப் பொருள் கூறிவந்தார். ஆயினும் ''திதத்தத்த'' எனத் தொடங்கும் 97 தவர்க்க எழுத்துக்களைக் கொண்ட நான்கு அடிகளையுடைய 54 ஆவது பாடலைப் பாடியபொழுது வில்லி அதற்குப் பொருள்கூற முடியாது தோல்வியுற்ருர். வாத நிபந்தனைப்படி வில்லிபுத்தூரரரது காதினை அறுத்தல் முறையாயினும் கருணைக்கடலாகிய அருணகிரி அக்கொடிய தண்டனையை நிறைவேற்ருது அவரை மன்னித்தருளினுர். வில்லியும் அன்றுதொட்டு அகந்தை நீங்கி தூய மனத்தினராயினர்.

அருணகிரியாரின் காலத்தை நிச்சயிப்பதற்குச் சிறந்த சான்று இவர் பிரபுடதேவராயனது ஆட்சிக்காலத்து வாழ்ந்தமையாகும். 15ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் இரண்டாம் பிரபுடதேவராயன் என்னும் அரசன் அரசோச்சினுன். இவர் சிறந்த முருக பக்தன், இவரது முன்னிலையிலேயே வில்லிபுத்தூரருடன் அருணகிரியார் வாதிட்டார். அதுவுமன்றித் தாம்பாடிய திருப்புகழில் பல இடங்களில் பிரபுடராயரைப் பாராட்டியுள்ளார். ''அதல சேட ஞராட'' என்ற தலைப்புடைய திருப்புகழில்,

''உதய தாம மார்பாபி ரபுட தேவ மாராஜன்
உளமு மாட வாழ்தேவர் பெருமாளே''

என்ற தொடரால் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 14ஆம் நூற்ருண்டின் பிற் பகுதியில் வாழ்ந்த சோமநாதன் என்னும் திருமடத்தலைவரும் அருணகிரியாரால் பாடப்பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரிவையொரு பாக மான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவ ருது பேணும் அறிவாளன்
அமணர்குல கால னாகும் அரியதவ ராஜ ராஜன்
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும் முருக,"

என்பதே அப்பாடலாகும்.

சைவப் பன்னிரு திருமுறை போன்று முருகன் பன்னிரு திருமுறை வகுத்த வி. எஸ். செங்கல்வராயபிள்ளை அவர்களும் தமது ஆராய்ச்சியில் அருணகிரிநாத சுவாமிகள் காலம் 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

அருணகிரிநாதர் திருத்தலங்கள் தோறும் சென்று அருளிச் செய்த சந்தம் குதித்தோடும் பக்திரசம் ததும்பும் பாடல்களாகிய திருப்புகழோடு; கந்தர் அலங்காரம், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருஎழு கூற்றிருக்கை ஆகியவற்றையும் அருளிச் செய்துள்ளார்கள், அறிஞர்கள் இவற்றைக் கற்றுச் சிந்தித்துத் தெளிந்து பயனடைவாராக.

சிவஞான பாநுவாகத் திகழ்ந்து அருள் ஒளி வீசிய இக் குருநாதர் ஆனிமாதம் பௌர்ணமி தினத்தன்று மூல நட்சத்திரத்தில் அதாவது அவர் அவதரித்த அதே தினத்தில், அத்துவித முத்தி பெற்றார்.

"வேலா! சரணம் சரணம்என்
மேல்வெரு ளாமல்இனி
மேலா யினுங்கடைக் கண்பார்
பருப்பத வேந்தன்மகள்
பாலா! குறுமுனி யார்க்கும்
திருப்புகழ்ப் பண்ணவர்க்கும்
ஆலாலம் உண்டவர்க் கும்உப
தேசித்தஎன் ஆண்டவனே,"

"யமுனா"
ஆனைக்கோட்டை,
12-5-78.

சி. விஸ்வலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வேலும் மயிலும் துணை

# கந்தர் அநுபூதி

## காப்பு

### விபூதி தியானம்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

**பதவுரை:** நெஞ்சக் கனகல்லு – மனமாகிய கடினமான கற்பாறையானது; நெகிழ்ந்து உருக – இளகி உருகும்படி; தஞ்சத்து அருள் சண்முகனுக்கு – தன்னிடம் சரண்புகுந்த மெய்யடியார்களுக்கு அருள் செய்கின்ற அறுமுகப் பண்ணவனுக்கு; இயல்சேர் – உள்ள நல்லியல்புகளைச் சொல்கின்ற; செஞ்சொல் புனைமாலை – செவ்விய சொற்களாலாக்குகின்ற பாமாலையானது; சிறந்திடவே – சிறப்புற்று நின்று வழங்குமாறு; பஞ்சக்கர ஆனை – ஐங்கரத் தமலனும் விநாயகப் பெருமானுரைது; பதம் பணிவாம் – திருவடிக் கமலங்களை யாம் வணங்குவாம். என்றவாறு.

**பொழிப்புரை:** தன்னிடம் சரண்புக்க அடியார்களது கல்மனமும் உருகும்படி அருள்செய்கின்ற அறுமுகப் பெருமானுக்குரிய அருட்குணங்களைச் சொல்கின்ற இப் பாமாலை சிறப்புற்று விளங்குமாறு விநாயகப்பெருமானை வணங்குவாம். என்றபடி.

**விளக்கவுரை:** யாம் – தோன்றா எழுவாய், நெஞ்சம் என்றது ஈண்டு மனத்தை உணர்த்தி நின்றது. உடம்புகள், உலகங்கள் எல்லாம் அழிந்து ஒடுங்க மூலமலத்தோடு தனித்துநின்ற எம்மைத் தன் திருவருளால் மாயையில் நின்றும் உடம்புகள், உலகங்கள், போகப்பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் தந்து உபகரித்த சண்முகத் தெந்தையது பேரருளை நினைந்து உருகவேண்டியதே நம் கடனாகவும், அங்ஙனஞ் செய்யாது நிலையற்ற விடய போகங்களிலேயே சென்று சென்று எம்மைப் பிறப்பு இறப்பிற் படுத்தி அலைக்கின்ற மனத்தின் கொடுமையை உணர்ந்தே "நெஞ்சக் கனகல்" என்றார்.

இதே போன்று எமது திருஞானசம்பந்த மூர்த்திகளும்,

"தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால்
எனது நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்சொண்
டஞ்சல் நெஞ்சே."

என்று கூறியருளுவதும் காண்க.

இனி அப்பர் சுவாமிகளும்,

"நெஞ்சே நீநினையாய்
நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய்"

என்றும்,

'விருப்பிலா இருப்புமன வினையார்க் கென்றும்
பொய்த்தவன்காண்"

என்றும்,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா"

என்றும்,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே."

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்" என்றும் கூறியருளுவது காண்க.

இனிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

"வேந்த ராயுல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்தவிவ் வுடலிது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயர்உழந் திடுமிப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையி லாட்டுகந் தானைப்
பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே."
என்றும் கூறியருளுவது ஓர்க.

இனி மணிவாசகப்பெருமானும்,

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே."
என்றும்,

"இரும்புதரு மனத்தேனை" என்றும்,
"நெஞ்சம் கல்லாம்" என்றும்,

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்(கு)
அன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே."
என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாறுடுதி பிணநெஞ்சே"
என்றும் கூறியருளுவது காண்க.

இனி, நம் தாயுமான சுவாமிகளும், "ஆமாழி" என்று தொடங்கி "பாழான என் மனம்" என்றும், "இமையளவு" என்று தொடங்கி "மனமாயை அம்ம வெல்ல எளிதோ" என்றும், "ஆடிய கறங்குபோல் ஓடியுழல் சிந்தையை அடக்கிஒரு கணமேனும் யான் காணிலேன் திருவருளை" என்றும், "கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென் கல்நெஞ்ச முருகவில்லையே" என்றும் கூறியருளுவது காண்க.

இனிக் கச்சியப்ப சிவாசாரியரும், "தீயேன் நெஞ்சக வடுக்கல்" என்றும் கூறியருளுவது காண்க.

அருணகிரிநாத சுவாமிகள் தாம் எடுத்துக்கொண்ட கந்தரநுபூதிக்கு முதலில் வேண்டப்படுவது மன உருக்கமே என்றும், அம் மன உருக்கத்தைத் தந்தபின் தன் அருளைத் தந்து தம்மை அனுபவிக்குமாறு செய்தான் என்றும் நாம் அறியுமாறு "நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத் தஞ்சத் தருள்சண் முகன்" என்றார். "தஞ்சத்து அருள் சண்முகன்" என்றதற்குத் தஞ்சமாக இருந்து அருள் செய்பவன் எனினுமாம்.

"இயல்சேர் செஞ்சொற் புனைமாலை" என்பதற்கு "இயற்றமிழ்சேர் செஞ்சொற் புனைமாலை" என உரைப் பாருமுளர். அது சிறந்த உரையன்று.

பஞ்சக்கர ஆனை – விநாயகப்பெருமான்; அவரது திருமேனி பிரணவ மயம்; பிரணவத்திலிருந்தே எழுத்துக்கள் எல்லாம் வெளிவரவேண்டும். ஆதலின் முதலில் விநாயகர் வணக்கம் கூறுவது புலவர் மரபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

## 1. மதயானை அநுசரிக்க

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

**ப - ரை:** ஆடும் பரி என - தன் கலாபியை விரித்து நடனம் செய்யும் மயில் எனவும்; வேல் என - வேல் எனவும்; அணி சேவல் என - அழகிய கொடிச் சேவல் எனவும்; பாடும் பணியே - பாடுகின்ற தொழிலையே; பணியாய் அருள்வாய் - தொண்டாக அருள் செய்ய வேண்டும்; தேடும் கயமா முகனை - தன் பகைவர் யாண்டுளர் என்று தேடித்திரிகின்ற கயமுகாசுரனை; செருவில் சாடும்—போர் முனையிலே பொருது வென்ற; தனி - இணையற்ற; யானை - யானைமுகப் பெருமானாகிய விநாயகனுக்கு; சகோதரனே - பின்பிறந்தவனே. எ - று.

**பொ - ரை:** விரோதிகளைத் தேடுகின்ற கயமுகாசுரனை வென்ற கணபதிக்குத் தம்பியே! உனது மயில், வேல், சேவல் என்று பாடுகின்ற பணியையே என் வாழ்க்கைப் பணியாகத் தந்தருளும். எ - டி.

**வி - ரை:** காண்பவர் எவரும் மகிழும்படி தோகையை விரித்து ஆடுவது மயில். அதுவே முருகவேளுக்கு வாகனம் என்பது தோன்ற "ஆடும்பரி" என்றார்.

தேவரைச் சிறைமீட்கச் சூரபன்மனோடு போர்செய்த பொழுது இந்திரன் மயில்வாகனமாகி அறுமுகப் பெருமானைச் சுமந்தான். அது,

"இந்திரன் அனைய காலை எம்பிரான் குறிப்புந் தன்மேல்
அந்தமில் அருள்வைத் துள்ள தன்மையும் அறிந்து நோக்கிச்
சுந்தர நெடுங்கட் பீலித் தோகைமா மயிலாய்த் தோன்றி
வந்தனன் குமரற் போற்றி மரகத மலைபோல் நின்றான்."

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஐயகேள் அமர ரெல்லாம் வழிபட அளியன் றன்பாற்
செய்யபே ரருளை வைத்தாய் ஆதலிற் சிறுமை தீர்ந்தேன்
உய்யலா நெறியுங் கண்டேன் உன்னடி பரிக்கப் பெற்றேன்
பொய்யுலா மாய வாழ்க்கை புன்மையும் அகல்வன் மன்னோ."

என்றும் கந்தபுராணத்து வருதல் காண்க. இனி இது வன்றிச் சூரனும் முருகவேளுக்கு வாகனமான மயிலாய்த் தோன்றி இன்றும் தொண்டுசெய்து மகிழ்கிறான். அது:

" சீர்திகழ் குமர மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியின் இருக்கை நீங்கி உணர்வுகொண் டெழுகி நின்ற
சூர்திகழ் மஞ்ஞை ஏறிச் சுமக்குதி எம்மை என்னப்
பார்திசை வான முற்றும் பரியென நடாத்த லுற்றான்."

என்றும் கூறுவது காண்க.

அங்ஙனஞ் சூரனும் மயில் அறுமுகத்தமலனைச் சுமந்து செல்லுங்கால் கடல்கள் உடைந்து கொந்தளிக்கவும், மேருமலை வெடிப்பவும், பூமி பிளக்கவும், வடவாமுகாக்கினி ஒடுங்கவும், சண்டமாருதம் துடிதுடிக்கவும், அண்ட கோளகை நடுங்கவும் கலாபியை வீசி இடிக்கூட்டங்கள் புரளுமாறு ஆர்ப்பரித்துச் சென்றது. இத்தகைய பெருமையை உடையது முருகனுடைய மயில். அதைப் புகழ்ந்து பாடுவது முருகவேளுடைய திருவருளைப் பெறுவதற்குச் சிறந்த வழியாதல்பற்றியே ஆடும் பரியெனப் பாடும் பணியை அருள்வாய் என்று முருக தியானத்துக்கு அடி கோலிய அடிகளுக்கு அடுத்தபடியாக வேல் எனப் பாடும் பணியை அருளவேண்டும் என்று கூறுகிறார்.

முருகவேளுடைய திருக்கரத்திருக்கும் வேல் ஞானசக்தி மயமானது. பிரமன், திருமால், இந்திரன், சந்திரன், சூரியன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் முதலான எல்லாத் தேவர்களது படைகளுக்கும் நாயகமானது. ஆதலின் வேல்நாயகம் என்று அறிஞர்கள் புகழ்வர்.

பானுகோபன் மூன்றாம்நாட் போரிலே மாயப் படையை விட்டு வீரவாகு ஆதிய வீரரையும் பூதப் படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞரையும் மயக்கிக் கட்டி ஆழ்கடற் கண்ணே எறிவித்தான். முருகவேட் பெம்மான் தன் வேற்படையை அங்கு விட அது பேரொளிவீசிச் சென்றபொழுது:

"மின்னல் பட்டன முகிலிருள் பட்டன விசும்பிற்
றுன்னல் பட்டன காரிருள் பட்டன துன்னூர்
இன்னல் பட்டிடு மெய்யிருள் பட்டன எரிமுன்
பன்னல் பட்டன நேமிசூழ் தனியிருட் படலம்."

என்றும்,

"எரி நடுங்கிய தனிலமு நடுங்கிய தென்பாற்
கரி நடுங்கிய வளக்கரு நடுங்கிய கனக
கிரி நடுங்கிய தரவின நடுங்கிய கிளர்தேர்
அரி நடுங்கிய திந்துவு நடுங்கிய தம்மா."

என்றும்,

"அங்கி தன்படை கூற்றுவன் றன்படை அனிலன்
துங்க வெம்படை அளக்கர்கோன் றன்படை சோமன்
செங்கை வெம்படை மகபதி பெரும்படை திருமால்
பங்க யன்படை யாவையுந் தொழுதுடன் படர."

என்றும் அதன் பெருமை வெளிப்படக் கூறி, மேலும் வீரவாகு முதலிய வீரர் கூற்றாக:

"அந்தமி லொளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் ணின்றும் வந்த வியற்கையாற் சத்தி யாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தோம்."

என்றும் கந்தபுராணத்திற் கூறுமாறுணர்ந்து வேலைப் பாடி. வேலன் அருளைப் பெறுவேம். நக்கீரரும்,

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை."

என்று கூறுவதுங் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடும் பரிவேல்" என்ற சொற்களுக்கு அடுத்த படியாக "அணிசேவல்" என்று சேவற்கொடியைப் புகழ்ந்தார்.

கந்தவேட் பெம்மானுக்கும் சூரபன்மனுக்கும் நிகழ்ந்த போரிலே ஒரு சந்தர்ப்பத்தில் அக்கினிதேவனே சேவற் கொடியா யமர்ந்தான். அது,

"ஏவ லோடும் எரிதழற் பண்ணவன்
வாவு குக்குட மாண்கொடி யாகியே
தேவ தேவன் திருநெடுந் தேர்மிசை
மேவி யார்த்தனன் அண்டம் வெடிபட."

என்று கந்தபுராணம் கூறுவது ஓர்க.

அஃதன்றியும், சூரன் பதுமன் என்னும் இருவருமே சூரபன்மாவாகத் தோன்றி வேலாற் கிழிபட்டு மயிலாயும் சேவலாயும் ஆறுமுகப் பெருமானுக்கு ஆட்பட்டனர்.

"அக்கணம் எம்பி ரான்றன் அருளினுல் உணர்வு சான்ற
குக்குட உருவை நோக்கிக் கடிதில்நீ கொடியே யாகி
மிக்குயர் நமது தேரில் மேவினை ஆர்த்தி யென்னத்
தக்கதே பணியீ தென்னு எழுந்தது தமித்து விண்மேல்."

என்று கந்தபுராணம் கூறுவது காண்க.

இங்ஙனம் முருகவேளது வாகனமாகிய மயிலையும், கொடியான சேவலையும் புகழ்ந்து பாடினுல் இலகுவாக முருகனது திருவருளைப் பெறலாமென்று கண்ட அடிகள்,

"ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்."

என்று வேண்டுகின்றார்.

பாடற்றிறண்டு சிறந்ததென்பதை அப்பர் சுவாமி களும், "அளப்பிலே கீதம் சொன்னூர்க் கடிகள்தாம் அருளு மாறே" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடும் கயமா முகன் – தன் பகைவர் எங்குள்ளார் என்று தேடி அடக்கி ஒடுக்குகின்ற துட்டக்குணம் உடைய கயமுகன்; துட்டர்கள் – பகைவரைத் தேடித் திரிகின்ற வர்கள்; அத்தகைய துட்டனை வதைத்தவர் விநாயக மூர்த்தி; அவருக்கு இளையவரான முருகனும் துட்டரைத் தண்டிப்பதில் வல்லவர் என்றபடி.

பரி – பரித்தலை உடையது; ஊர்தி; 'என' என்பதனை 'ஆடும்பரி' என்பதனோடும், 'வேல்' என்பதனோடும் கூட்டுக. 'பணியே' என்பதில் ஏகாரம் பிரிநிலை.

## 2. வணங்காரைத் தண்டிக்க

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

**ப – ரை:** உல்லாச – மகிழ்ச்சி மிக்க; நிராகுல – துன்பம் அற்ற; யோகவித – பலவிதமான யோகங்களை; சல்லாப – சம்பாஷணை செய்கின்ற; விநோதனும் – லீலையை உடையவனும்; நீ அல்லையோ – தேவரீர் அல்லவோ; (ஆதலால்) எல்லாம் அற – பற்றுக்கள் எல்லாம் அற்றுப் போக; என்னை இழந்த நலம் – சீவ போதத்தையும் பறி கொடுத்து அருளிலே திளைத்து நிற்கின்ற அருளானந்த நிலையையும்; சொல்லாய் – நீயே திருவாய் மலர்ந்தருள வேண்டும்; முருகா – என்றும் இளைய பெருமானே; சுர பூபதியே – தேவலோக நாயகனே. எ – று.

**பொ – ரை:** என்றும் இளையபெருமானே! தேவலோக நாயகா!! மகிழ்ச்சியைத் தருகின்ற துன்பமற்ற யோக வகைகளைப் பக்தர்களுக்கு உபதேசிக்கின்ற நீயே அடியே னுக்கும் எல்லாப் பற்றுக்களும் அற, யான் என்பது மழுங்கி அருளிலே தோய்ந்திருக்கின்ற ஆனந்த நிலையையும் சொல்ல வேண்டும். எ – டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வி — ரை :** உல்லாசம் – மகிழ்ச்சி. நிராகுலம் – துன்ப மின்மை. யோகவித – பலவிதமான யோகசாதனைகள். சல்லாபம் – கூடிப்பேசுகை ; சம்பாஷணை. விநோதம் – விளையாடிப் பொழுதுபோக்கல்.

யோகங்கள் பலவகைப்பட உண்டு. ஆதலால் ''யோக விதம்'' என்றார். அவையாவன : வாசியோகம், ஹட யோகம், கன்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்பவை முதலாக உண்டு. இவற்றுள் பக்தியோகமும், ஞானயோகமும் சிறந்தவை. இவற்றின் விளைவுகள் யோக நூல்களிற் காண்க. குமரவேட் பெம்மான் சிவதருமோத் தரத்தும், காசிகாண்டத்தும் யோகவிதங்களை அகத்தி யர்க்கு உபதேசித்தவர் ஆதலால் ''யோகவிதச் சல்லாப விநோதனும் நீயல்லையோ'' என்றார்.

யோகத்திற்கு எட்டு அங்கங்கள் சொல்லப்படும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா கர்மம், தாரணை, தியானம், சமாதி என.

''அட்டாங்க யோகமும் ஆதாரம் ஆறும் அவத்தை ஐந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே .....''

என்று பட்டினத்தடிகளும் கூறுவர். முருகவேட் பெம்மான் யோககுருவாயும் அன்பர்க்கு அருள் செய்பவர்.

ஆன்மாவானவன் திருவருட்டுணை கொண்டு எல்லாத் தொடர்புகளையும் விட்டு, அருளே தாகமாய்ச் சென்று அவ்வருள் வெளியிலே சீவபோதமும் மழுங்க தோய்ந்து நிற்பதே அருளானந்தமாகும். அதை எனக்குச் சொல்லாய் முருகா என்று அடிகள் வேண்டுகின்றார். இதனையே நின்மலதுரியம் என்பர்.

### 3. கல்வியின் மெச்ச

**வானோ புனல்பார் கனல்மா ருதமோ**
**ஞானோ தயமோ நவில்நான் மறையோ**
**யானோ மனமோ எனையாண் டவிடம்**
**தானோ பொருளா வதுசண் முகனே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப - ரை: சண்முகனே – ஆறுமுகப் பெருமானே! வானோ – ஆகாயமோ; புனல்பார் கனல் மாருதமோ – நீர், மண், தீ, காற்றோ; ஞானோதயமோ – அருளுதயமோ; நவில் நான்மறையோ – சொல்லத்தக்க நான்கு வேதங்களுமோ; யானோ – ஆன்மாவாகிய யானோ; மனமோ – மனோதத்துவமோ; எனை ஆண்ட இடம் தானோ – அடியேனை ஆட்கொண்டருளிய புண்ணிய க்ஷேத்திரம் தானோ; பொருளாவது – மெய்ப்பொருளாவது திருவருள் செய்வீர். எ – று.

பொ – ரை: அறுமுகக் குருபரனே! மெய்ப்பொருளாவது, ஐம்பெரும்பூதங்களோ, அறிவுதயமோ, நால் வேதமோ, யானோ, என்மனமோ, என்னை யடிமைகொண்ட புண்ணிய க்ஷேத்திரமோ, இவற்றின் வேறோ எதுவென்று தெளியாது திகைக்கின்றேன். தேவரீரே தெளிவுறக்காட்டியருளவேண்டும். எ – டி.

வி – ரை: ஓகாரங்கள் ஐயப்பொருளில் வந்தன. புனல், பார், கனல் என்பவற்றோடும் ஓகாரத்தை இணைக்குக. ஞானோதயம் – அருள் உதயம்; அருள் – உள் ஒளி. பொருள் – மெய்ப்பொருள்; அது பரசிவனை உணர்த்தி நின்றது. அப் பரசிவன் இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டது என்பது குறிப்பெச்சம்.

"தேனென்று பாகென்று உவமிக்கொ ணாமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன்று அசரீரி யன்று சரீரியன்றே."

என்பது ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

ஐம்பூதங்களும், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், ஏனைய கருவி கரணங்களும் கடந்த இடத்தில் உண்மைப் பொருள் விளங்குமென்பதை முற்றத்துறந்த பட்டினத்தடிகளார் பின்வருமாறு கூறியருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பூதமும் கரணமும் பொறிகளும் புலனும்
பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்குநாள் உளதோ?"

ஞாஞேயமென்றது இங்கு பிரகிருதிதத்துவத்திலுள்ள புத்திதத்துவத்தைக் குறிக்கும். நான்மறைகளும் அபர ஞானமாகிய கருவியறிவைத் தருவன. யான் என்பது புருடத்துவமாகும். மனம் அந்தக்கரணங்களிலொன்று. எனை ஆண்ட இடம், அதாவது அடிகளாரை ஆண்ட இடம் திருவண்ணமலை.

## 4. துறவு பெற

வளைபட் டகைம்மா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.

ப — ரை: வளைபட்ட கைம்மாதொடு – வளையலணிந்த கைகளையுடைய மனைவியோடு; மக்கள் என்னுந் தளைபட்டு – மக்கள் என்று சொல்கின்ற கட்டிலே அகப்பட்டு; அழியத் தகுமோ தகுமோ – நற்கதியடையாமல் அழிந்து போவது தகுமோ தகுமோ (தகாது என்றபடி); கிளைபட்டு எழுசூர் உரமும் – சுற்றத்தவர்கள் சூழ மாறுபட்டுப் போருக்கெழுந்த சூரபன்மனது மார்பும்; கிரியும் – கிரௌஞ்ச மலையும்; தொளைபட்டு உருவ – துளைக்கப்பட்டு உருவி ஓடும்படி; தொடு வேலவனே – செலுத்திய வேலாயுதத்தை உடையவனே. எ – று.

பொ — ரை. சூர்மார்பும் குன்றும் தொளைபட்டு ஊடுருவிப் போகும்படி விட்ட வேலையுடைய எம்பெருமானே! அடியேன் மனைவி, மக்கள் என்னுங் கட்டிலே சிக்குண்டு அழிவது தகாது! தகாது!! எ – டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி – ரை: பிறர் எவரது படைக்கலங்களாலும் துளைத் துருவ முடியாத வரபலம் மிக்க சூரபன்மனது மார்பையும், கிரவுஞ்ச கிரியையும் துளைத்து உருவிய வலிய வெற்றி வேற் பெம்மானே! தேவரீருக்கு அடிமைப்பட்ட சிறியேன், உலகத்துள்ள ஏனையோர் போல, மனைவி மக்கள் என்னும் மாயாபாசத்திற் கட்டுண்டு உன் திருவடித் தியானத்தை மறந்து அழிவது உனது பெருமைக்குத் தகாது, தகாது என்று வேண்டுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

தகுமோ, தகுமோ – அவலம் பற்றிய அடுக்குத் தொடர். ஓகாரங்கள் எதிர்மறை.

முருகவேளுக்கு வேறு படைகளும் உள. ஆயினும் வேற்படையே மேலான வலிமை உடையது. அதனாலேயே "வேலவனே" என்றார்.

சிவபிரான் முருகவேளுக்கு "சூரசம்மாரம் செய்து தேவர்துயர் தீர்த்து வா" என்று அனுமதி கொடுத்த ஞான்று பிற பல படைகளையுங் கொடுத்துப் பின்னர் எல்லாத் தேவப் படைக்கலங்களுக்கும் நாயகமாக வேற் படையைக் கொடுத்தருளினார். அது,

"ஆயதற் பின்ன ரேவின்மூ தண்டத்
தைம்பெரும் பூதமு மடுவ
தேயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது
ஏவர்மேல் விடுக்கினு மவர்தம்
ஆயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி
மன்னுயி ருண்பதெப் படைக்கும்
நாயக மாவ தொருதனிச் சுடர்வேல்
நல்கியே மதலைகைக் கொடுத்தான்."

என்று கச்சியப்பர் கூறுவது காண்க. சூருரமுங் கிரியும் துளைத்துருவ வேல்கொண்ட சரிதம்,

"அங்கவர் மொழியும் வெய்யோ னாற்றலுந் தெரிந்து செவ்வேள்
செங்கைய தொன்றில் வைகுந் திருவடு வேலை நோக்கி
இங்கிவ னாகம் போழ்ந்தே யேகுதி யிமைப்பி னென்னத்
துங்கம துடைய சீர்த்திச் சூரன்மேற் செல்லத் தொட்டான்."

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாரக னென்பதோர் பேரோனைச்
சஞ்சல முறுகிறௌஞ் சத்தை
ஓரிரை செல்லுழ னுடல்கீறி
யுள்ளுயிர் கொண்டுபு றத்தேகிப்
பாரிடர் தம்மை இலக்கத்தோன்
பதின்மர்க ளாகவு ரைத்திடுகின்ற
வீரரை மீட்டிவண் வருகென்றே
வேற்படை தன்னை விடுத்திட்டான்,

என்று கந்தபுராணம் கூறுவது கண்டு தெளிக.

ஞானார்த்தம்:– சூரன் – ஆணவ மலம். கிரவுஞ்சகிரி – சஞ்சித கன்மம், வேல் – ஞானசக்தி.

வளைபட்ட கைம்மாவொடு மக்களெனுந் தளைபட்டு அழிதல் – ஒருவன் பெண்ணாசையினாலே மனைவிக்கு அடிமையாய்ப் பிள்ளைகளைப் பெற்று அவர்களைக் காப்பாற்றுவதிலேயே தன் வாழ்நாள் முழுவதையுஞ் செலவழித்து மரண காலத்தில் இயமன் கையகத்தே சிக்குண்டு, துன்புறுகின்றான். இது அவன் அறியாமை. மனிதராகப் பிறந்தது மனைவி மக்களைச் சம்பாதித்து மரணம் அடைவதற்கு அல்ல. கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறுவதற்கேயாம். அது,

"மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ"

என்று சிவஞான சித்தியாரிற் கூறுவதும் காண்க. இதுவே அடிகள் குறிப்பு.

எனவே, சூரனாகிய ஆணவ மலத்தையும், கிரவுஞ்சமாகிய மாயையையும் வேல்கொண்டழித்த வேலாயுதக் கடவுளே பாசபந்தத்தில் அடியேன் கட்டுண்டழுந்தாமல் காத்தருளவேண்டு மென்று முருகனிடம் அருணகிரியார் வேண்டுதல் செய்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. மாயையை ஒழிக்க

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே.

ப - ரை: மகமாயை களைந்திட – வலிமைமிக்க பெரிய மாயாபாசத்தை நீக்க; வல்லபிரான் – தக்க வல்லமையை யுடைய ஆறுமுகப்பிரான்: முகம் ஆறு மொழிந்தும் – ஆறு திருவாயால் உபதேசித்தும்; ஒழிந்து இலனே – விட்டு நீங்கினேன் இல்லை; அகம் மாடு – வீடு, செல்வம்; ஐ – அழகிய; மடந்தையர் என்று – பெண் நல்லார் என்று ஆசைப்பட்டு; அயரும் – முருகதியானத்தை மறக்கச் செய்கின்ற; சகமாயையுள் நின்று தயங்குவதே – உலக மாயைக்கு உட்பட்டு நின்று மயங்குவதை, எ – று.

பொ - ரை: பெரிய மாயா பந்தத்தை நீக்கவல்ல அறுமுகப்பிரான் தன் ஆறு திருவாயா லுபதேசித்தும் வீடு, செல்வம், அழகிய பெண்கள் என்று ஆசைப்பட்டு அயர்ச்சியுற்று உலக மாயைக்குள் நின்று மயங்குவதை விட்டேனில்லையே. எ – டி.

வி – ரை: முகம் – வாய்.

''பிரான் முகமாறு'' என்பதை ஆறுமுகப்பிரான் என்று இயைத்து மகமாயை களைந்திடவல்ல ஆறுமுகப்பிரான் மொழிந்தும் ஒழிந்திலனே என்று கொள்ளலும் ஒன்று. அல்லாமலும் ''பிரான் முகம் ஆறும் மொழிந்தும் ஒழிந் திலனே'' என்று கொண்டு ஆறுமுகப்பிரானது ஆறு திருமுகங்களையும் யான் பலதரம் சொல்லியும் ஒழிந்திலனே என்பாரும் உளர். அதற்கு மேற்கோளாக ''ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்'' என்று தொடங்கும் திருப்புகழைக் காட்டுவார்கள். அதுவும் இழுக்கன்று. இன்னும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருமுருகன் தன்னுடைய திருமுகங்கள் ஆறின் தத்துவத்தை எனக்குத் திருவாய் மலர்ந்தும் அதனை உணர்ந்து உய்தி பெற்றிலனே" என்று கொளலும் ஏற்புடைத்து.

ஏ இரண்டும் அசை.

மாயை மும்மலங்களில் ஒன்று. அது சுத்தம், அசுத்தம், பிரகிருதி என மூன்று வகைப்படும். மாயையானது ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களாய் விரிந்து நின்று உபகரித்தலோடு மயக்கமும் செய்யும். இதனாலன்றோ "விடிவா மளவும் விளக்கனைய மாயை" என்று திருவருட்பயன் பகரும்.

"மகமாயை களைந்திட வல்லபிரான்" என்றமையினாலே ஞானகுருநாதனை ஆறுமுகத்தமலன் தன்னைச் சரண்புகுந்த மெய்யன்பர்களது மாயாபாசத்தை அகற்றி ஆட்கொள்ள வல்லவன் என்பது பெறப்பட்டது.

"மொழிந்தும் ஒழிந்திலனே" என்றது தனது அபக்குவ நிலையை நினைந்து இரங்கிக் கூறியது.

## 6. மாதரைத் தழுவ

**திணியா னமனோ சிலைமீ துனதாள்**
**அணியா ரரவிந் தமரும் புமதோ**
**பணியா வெனவள் ளிபதம் பணியும்**
**தணியா வதிமோ கதயா பரனே.**

**ப – ரை:** திணி ஆன – மிகவுங் கடினமான: மனோ சிலைமீது – எனது மனமாகிய கல்லின்மீது; உனதாள் – தேவரீரது திருவடியாகிய; அணி ஆர் அரவிந்தம் – அழகு நிரம்பிய செந்தாமரை மலரானது; அரும்பும் அதோ – தோன்றத் தக்கதோ? (அன்று); பணியா என – உனக்கு வேண்டிய பணிவிடைகளைச் சொல்லுவாய் என்று; வள்ளி பதம் பணியும் – வள்ளிநாயகியாரது திருவடிகளை வணங்கிய; தணியா அதிமோக – குறைவுபடாத பெரிய காதலையுடைய; தயாபரனே – கருணாமூர்த்தியே. எ – று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ — ரை: "மங்கை நல்லாய்! உனக்கு வேண்டிய பணிவிடைகளைக் கூறுவாய்" என்று, வள்ளிநாயகியாரது திருவடிகளை வணங்கிய, குறையாத பெரிய காதலையுடைய கருணைக் கடவுளே! உனது திருவடிக் கமலம் என் மனக் கல்லிலே தோன்றத் தக்கதோ. (அன்று) எ—டி.

வி — ரை: திண்ணிது – திணி, என நின்றது.

"திணியான மனோசிலை" என்பதற்கு காப்புச் செய்யுட்கண் "நெஞ்சக் கனகல்" என்பதற்குக் கூறப்பெற்ற விரிவை நோக்குக.

ஓகாரம் எதிர்மறை.

"பணியா என வள்ளிபதம்" பணிந்த வரலாறு: அறுமுகக் குருபரன் அன்பு பற்றிய ஐந்திணை ஒழுக்கத்தில் முதற்கண் நின்ற குறிஞ்சித்திணை ஒழுக்கத்தை நாடகமாக நடித்துக்காட்ட விரும்பித் திருமால் புதல்வியாம் சுந்தர வல்லியாரை நோக்கி "மான்வயிற்றுதித்து வேடர்பால் வளர்ந்து புனங் காத்திருக்கக் கடவை; யாம் அங்கு வந்து உன்னைத் திருமணம் செய்வேம்" என்று கூறி அவளை அனுப்பி அவ்வண்ணமே வள்ளிமலைச் சாரலை யடைந்து வள்ளிநாயகியாரை இரந்தும் பணிந்தும் ஆட்கொண் டருளிய லீலையாகும். அது,

"உற்ற கேளிரு நீங்களே தமியனுக் குமக்குப்
பற்ற தாயுள பொருளெலாந் தருவனும் பணிகண்
முற்று நாடியே புரிகுவன் முனிவுகொள் ளாது
சற்று நீரருள் செய்திடு மென்றனன் தலைவன்"

என்றும்.

"ஈறின் முதியோ னிரங்கி யிருந்துகுறை
கூறி மதிமயங்கிக் கும்பிட்டு நின்றளவில்
நாறு மலர்க்கூந்தல் நங்கை நகைத்துயிர்த்துச்
சீறி நடுநடுங்கி இவ்வாறு செப்புகின்றாள்"

என்று கந்தபுராணத்து வள்ளி திருமணப் படலத்து வருதல் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை முளைத்துப் பூப்பது நீரும் சேறும் நிறைந்த வாவியிலேயன்றிக் கற்பாறையில் அன்று. அதுபோலத் தேவரீரது திருவடிக் கமலங்கள் தோன்றுவது நினைந்து நினைந்து உருகுகின்ற மெய்யன்பர்களது உள்ளத் தடாகத்திலேயே என்று திருவடியின் அருமையும் தன்மனத்தின் கடுமையுந் தோன்ற "திணியான மனோசிலைமீது உனதாள் அணியார் அரவிந்தம் அரும்புமதோ" என்றார்.

## 7. தீராப் பிணிதீர

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

ப — ரை: கெடுவாய் மனனே — கெடுதலையுடைய மனமே; கதிகேள் — வீட்டையும் வழியைச் சொல்கின்றேன் கேள்; கரவாது இடுவாய்—உன்னிடம் யாசித்தவர்க்கு இல்லையென்னாது இயன்றதைக் கொடு; வடிவேல் இறைதாள் நினைவாய் — கூரிய வெற்றிவேற் பெம்மானரது திருவடிக் கமலங்களை நினை; சுடுவாய் நெடுவேதனை தூள் படவே — அங்ஙனம் நினைத்தனையேயானால் நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்ற பிறவித்துன்பத்தைப் பொடிப் பொடியாகப் போகுமாறு ஞானாக்கினியால் சுட்டு எரிப்பவனுவாய்; விடுவாய் விடுவாய் வினையா வையுமே — எல்லாக் கன்மங்களையும் விட்டுவிடு, விட்டுவிடு. எ — று.

பொ — ரை: கெடுகின்ற மனமே யான் சொல்கின்ற வழியைக் கேள்! உன்னாலியன்ற பொருளைத் தருமம் செய்; செவ்வேற் பெருமானை நினை; துன்பங்களைச் சுடு; கன்மங்களை விடு. எ — டி.

வி — ரை: கதி — வழி. "விடுவாய், விடுவாய்" விரைவுபற்றிய அடுக்கு, ஏயிரண்டும் அசை. மனம் என்பது எமது நினைவுகளின் சொரூபம். அது தூலம், சூக்குமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இருவகைப்படும். தூலம் அலை போன்றது; சூக்குமம் கடல் போன்றது. அது கண், காது, மூக்கு, நா, மெய் என்னும் ஐம்பொறி வழியே சென்று உலகபோகங்களை எண்ணி எண்ணி அலைந்துகொண்டிருப்பது. அத்தகைய மனத்தை ஓர் இடத்திலே நிறுத்துவதென்றால் இலகுவான காரியம் அன்று. முதலில், மனம் வேறு, ஆன்மாவாகிய நாம் வேறு என்பதை உணரவேண்டும். பின்னர் அதன் ஓட்டத்தை நிறுத்தப் பழகவேண்டும். இதனை நம் வயிராக்கிய சதக நூலார் நன்றாகச் சொல்வர்.

"நின்றுரு தலைகுதல் விருப்புனக்
கதைநீத் திருக்குதல் நெஞ்சே
என்றன க்குநல் விருப்புவா
ளாவிவண் இருத்தல்தீ துயர்வீடு
சென்றுகாண் குவலென நினைந்தலை
தியோசிவன் திரிசயம் அன்றால்
ஒன்றும்நீ நினையா திருப்பதே
அதைத்தொட ருபாயமென் றறிகண்டாய்!"

என்று கூறுதலைக் கண்டு தெளிக.

நிலையில்லாத விடயபோகப் பொருள்களை நோக்கி ஓடி ஓடி அலைந்து திரிவதேயன்றி ஒருகுறியில் நின்று பரம்பொருளை நினைக்காத கெட்ட குணத்தை நோக்கியே அடிகள் "கெடுவாய் மனனே" என்று சடிந்து கூறினர். பின்னர் "கதிகேள்" என்று உறுதி கூறுகின்றார். கதி — முத்தியடையும் வழி.

"அறம் செய விரும்பு" என்பது பெரியபிராட்டியின் மூதுரை.

"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை,"

என்பது திருக்குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தருமமென்றொரு பொருளுளது
தாவிலா இருமையி லின்பமும் எளிதில் நல்குமால்"
என்பது கந்தபுராணம்.

இவ்வாறு எல்லா உண்மை நூல்களிலும் தருமமே உறுதி பயப்பது என்று கூறப்படும். ஆதலினுலேதான் அடிகள் "சரவாது இடுவாய்" என்று கூறினுர்.

அறம் செய்தவர்களுக்குத்தான் இறைதியானம் சித்திக்கும். அறம் செய்யாதவர்களுக்கு வறுமையும், நோயும், சத்துருவும் மனக்கிலேசமும் மாறு.

பின்னர் "சுடுவாய் நெடுவேதனை தூள்படவே" என்றுர். அங்ஙனம் வடிவேல் இறைதாள் நினைவின் பயனுல் நீண்ட துன்பங்களையெல்லாம் சாம்பராக்கலாம். நமக்கு இவ்வுலக வாழ்விலே வருகின்ற துன்பங்களுக்கெல்லாம் காரணம் யாம் செய்த பாவமேயன்றிப் பிறிதில்லை. கந்தவேட் பெம்மானுரது திருவடிகளை நம் மனம் உறுதியாக நின்று நினைந்தால் பாவங்கள் எல்லாம் சாம்பராகும். ஆகவே துன்பங்களும் ஒழிந்துபோம் என்ற உண்மையை உணர்ந்த அடிகள் "சுடுவாய் நெடுவேதனை தூள்படவே" என்று கூறியருளினுர்.

பின்னர் "விடுவாய் விடுவாய் வினை யாவையுமே" என்றது; மனத்தின் வினை – நினைவுகள், எவ்வித நினைவுகளும் இன்றி மனம் ஓய்ந்து நிற்பதே நமக்குச் சுகம்; அதுவே மவுன நிலையுமாம்.

"வினை யாவையும்" என்றதனுல் பாவத்தை விடுவது நல்லது, புண்ணியத்தையும் விடலாமோ என்று கேள்வி எழுகின்றதேயெனின் புண்ணியமும் பொன்விலங்குபோல ஆன்மாவைப் பந்தப்படுத்துவதேயாதலின் அதுவும் விடத்தக்கதே.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"
என்று திருக்குறளிற் கூறுவது காண்க. இது இருவினையொப்பு என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினையொப்பு, மலபரிபாகம் சத்திநிபாதம், சற்குரு தரிசனம் என்பவை தொடர்புடையன.

" புண்ணிய பாவம் இரண்டுள பூமியில் "

என்ற திருமந்திரமுங் காண்க.

## 8. குடிகளைத் தன்வசமாக்க

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே.

ப — ரை: அமரும்பதி — எனது ஊர்; கேள் — எனது சுற்றம்; அகம் ஆம் எனும் — எனது வீடும் ஆகும் இவை என்று அபிமானிக்கின்ற; இப்பிமரம் கெட — இந்த மயக்க அறிவு நசிக்குமாறு; மெய்ப்பொருள் பேசியவா — உண்மைப்பொருளை இன்னதென்று உபதேசித்த அருள்திறம் என்ன வியப்பாயிருக்கின்றது; குமரன் — என்றுங் குன்று இளமை உடையவனும்; கிரிராச குமாரிமகன் — மலையரையன் மகளாம் பார்வதிக்கு மைந்தனும்; சமரம் பொரு — போர் செய்கின்ற; தானவ நாசகனே — அசுர கூட்டத்தவரை அழிப்பவனும் ஆகிய குருபரன். எ — று.

பொ — ரை: குமரன், கிரிராசகுமாரி மகன், சமரம் பொருதானவ நாசகன் (ஆகிய குருநாதன்) என் ஊர், என் சுற்றம், என் வீடு ஆகும் இவை என்று அபிமானிக்கின்ற மயக்க அறிவு கெடுமாறு உண்மைப் பொருளை உபதேசித்த விதம் என்ன வியப்பாயிருக்கின்றது. எ — டி.

வி — ரை: எனக்கு அன்னியமாயுள்ள ஊர், சுற்றமித்திரர், வீடு முதலான மாயாகாரியப் பொருள்களை என்னுடையவை என்று நிச்சயித்திருந்த எனது பிராந்தி ஞானம் கெடுமாறு உண்மைப்பொருள் என் அனுபவத்துக்கு அகப்படும்படி குருநாதன் உபதேசித்தது மிகவும் வியக்கத்தக்கதே யென்று அடிகள் மகிழ்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிமரம்—பிரமம் என்பதன் விகாரம்; பிரமம் – கலக்கம், மயக்கம். மெய்ப்பொருள் – பரசிவம் ; பரசிவத் தியானம் உபதேசத்தாற் கைகூட மாயப்பிரபஞ்ச அனுபவம் நசித்தது.

"சமரம் பொருதானவ நாசகன்" என்றமையினாலே அபயம் புகுந்த அடியார்களைச் சத்துரு உபாதையில் நின்று மீட்டு இரட்சிப்பவன் என்பது பெறப்பட்டது.

## 9. பெண்ணாசை ஒழிக்க

மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் படரென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே.

ப – ரை : மட்டூர் குழல் – தேன் துளிக்கின்ற பூவை முடித்த கூந்தலையுடைய ; மங்கையர் மையல் வலைப்பட்டு – பெண் மையல் என்னும் வலையில் அகப்பட்டு ; ஊசல் படும் படர் – ஊஞ்சல் ஆடுவதுபோல் உள்ளம் தடுமாறுகின்ற துன்பத்திலிருந்து ; என்று ஒழிவேன் – என்றுதான் நீங்குவேனோ ; தட்டு ஊடு அற – தடையின்றி அதன் நடுவில் ஊடுருவும்படி ; வேல் சயிலத்து எறியும் – வெற்றி வேலாயுதத்தைக் கிரவுஞ்ச மலையின்மீது எறிந்த ; நிட்டூர – கடுமை மிக்கவரே ; நிராகுல – துன்பமில்லாதவரே ; நிர்ப்பயனே – பயம் அற்றவரே. எ – று.

பொ – ரை : கிரவுஞ்சகிரி இரு பிளவாகும்படி வேல் விடுத்த கடுமை மிக்கவரே, துன்பம் அற்றவரே, அச்சம் அற்றவரே, பெண் மையல் என்னும் வலையிற் சிக்குண்டு அலையும் துன்பத்தினின்று என்று நீங்குவேனோ! எ – டி.

வி – ரை : கிரவுஞ்சகிரி மிகப்பெரிய மாயைகளைச் செய்து பல முனிவர்களை மயக்கிக் கொன்ற கொடுமை மிக்கது. அது ஓர் அசுரனாக இருந்து பின்னர் அகத்திய முனிவரது சாபத்தால் மலையாயது. விண்ணுலகை மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுலகாக்கும்; மண்ணுலகை விண்ணுலகாக்கும்; கடலை மலையாக்கும்; மலையைக் கடலாக்கும்; சூரியனைச் சந்திரனுக்கும்; சந்திரனைச் சூரியனுக்கும்; பெரியதைச் சிறியதாக்கும், சிறியதைப் பெரியதாக்கும்; பூமியைக் கடலாக்கும்; கடலைப் பூமியாக்கும்.

" கன்னலின் அயுதத் தொன்றில்
கடவுளர்க் கேனும் நீத்தோர்
என்னவர் தங்கட் கேனும்
எனைப்பல மாயஞ் சூழ்ந்து
பன்னெடுங் காலஞ் செல்லப்
படுத்திடும் என்னின் அம்மா
அன்னவன் வன்மை யாவும்
ஆரறிந் துரைக்கற் பாலார் "

என்றும்,

" அத்தகு தகுவர் கோமான் அடற்கிர வுஞ்ச னென்போன் "
என்றும் கந்தபுராணம் கூறுமாறு காண்க.

இத்தகைய கிரவுஞ்சன் என்னும் அவுணன் அகத்திய முனிவர் வருவதைக் கண்டு மலைவடிவு கொண்டு ஒரு குகைவழி அமைத்துநிற்க, அகத்தியமுனிவர் அக் குகை வழியே செல்ல, அவ் வழியை அடைத்து மீண்டு வெளியேறவும் விடாமல் மறித்து இருட்படலமாகச் சூழ்ந்து மழை பொழியவும், இடி இடித்துப் பெருமாயஞ் செய்யவும் அவ் அவுணனது தன்மையை அறிந்து சாபம்இட்டார் என்பது சரிதம்.

இத்தகைய பெரிய மாய வெற்பைப் பிளந்த எம் பெருமானே இதுபோன்ற மங்கையர் மாயத்தில் அடியேன் சிக்குண்ணுது காக்க வேண்டும் என்பது அடிகள் வேண்டுகோள்.

பெண்ணுசையானது எவரையும் மயக்கவல்லது என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" காதென்று மூக்கென்று கண்ணென்று
காட்டியென் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை
தன்னை மறலிவிட்ட
தாதென்று எண்ணுமற் சுகமென்று
நாடுமித் துர்ப்புத்தியை
ஏதென் றெடுத்துரைக் கேனிறை
வாகச்சி ஏகம்பனே !

*என்பதாலுங் காண்க.*

' பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளி "

*என்றார் மணிவாசகரும்,*

**மலைபிளக்க வேல்விட்ட வரலாறு :**

" தாரகன் என்பதோர் பேரோனைச் சஞ்சலம்
உறுகிரௌஞ் சத்தை
ஓரிறை செல்லுமுன் உடல்கீறி உள்ளுயிர்
உண்டு புறத்தேகிப்
பாரிடர் தம்மை இலக்கத்தோன் பதின்மர்க
ளாக வுரைக்கின்ற
வீரரை மீட்டிவண் வருகென்றே வேற்படை
தன்னை விடுத்திட்டான் ".

*என்று கந்தபுராணம் கூறுமாறு காண்க.*

*" பரிசு என்று ஒழிவேன் " என்பதும் பாடம்.*
*பரிசு — தன்மை.*

## 10. நமனை விலக்க

***கார்மா மிசைகா லன்வரிற் கலபத்***
***தேர்மா மிசைவந் ததிரப் படுவாய்***
***தார்மார் பவலா ரிதலா ரியெனும்***
***சூர்மா மடியத் தொடுவே லவனே.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ப - ரை :** கார் மாமிசை காலன் வரில் - கரிய எருமைக் கடாவின்மீது இயமதருமன் வரும் மரண காலத்திலே; கலபத்து ஏர்மா மிசைவந்து எதிரப்படுவாய் - தோகையை உடைய அழகிய மயில்வாகனத்தில் எழுந்தருளி வந்து தரிசனம் தரவேண்டும்; தார்மார்ப - கடப்ப மலர்மாலை மிளிரும் திருமார்பினையுடைய எம்பெருமானே; வலாரி தலாரி எனும் சூர்மா மடிய - வலனுடைய பகைவன் என்று சொல்லப்படும் இந்திரனது பொன்னுலகை அழித்த சூரபன்மனது மாய மாமரவடிவம் அழியுமாறு; தொடு வேலவனே - செலுத்திய வேற்படையையுடைய எம் பெருமானே. எ-று.

**பொ - ரை :** கடப்ப மலர்மாலை அணிந்தவரே! வல னுடைய பகைவனுகிய இந்திரனது பொன்னுலகை அழித்த சூரனது மாமர வடிவம் துணியப்படுமாறு வேல்விட்ட வீரதீரனே!! என் தேகாந்தத்திலே இயமன் எருமைக் கடாவில் ஏறிவந்து தோன்றும்போது தேவரீர் அழகிய மயில்வாகனத்தில் எழுந்தருளிவந்து அடியேன் எதிரே தரிசனம் தரவேண்டும். எ - டி.

**வி - ரை .** கார்மா - எருமைக்கடா. காலன் - இயமன். கலபத்து ஏர்மா - மயில். எதிர்ப்படுவாய் என்பது எதிரப் படுவாய் என விகாரமாயிற்று.

வலன் + அரி - வலாரி என இயைந்தது. சூர்மா - சூரனுகிய மா.

''சூர்மா மடியத்தொடுவேலவன்'' என்றமையினுலே,

'ஓராயிர நூற தென்னும்
யோசனை அளவை யான்ற
பராரைமா உருவ மாகிப்
பலவுடைச் சினைமாண் கொம்பர்
விராவிய சூழ்ச்சி தன்னுல்
வேலைகள் முழுதும் விண்ணும்
தராதல வரைப்பு மெல்லாம்
தண்ணிழல் பரப்பி நின்ருன்''

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடம்பிடித் தமலன் செங்கண்
வெங்கன லுறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயிற்
றேய்த்துமுன் னியற்றி யன்ன
உடம்பிடித் தெய்வ மிவ்வா
றுருகெழு செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர்
மாமுத றடிந்த வன்றே".

என்ற கந்தபுராண சரிதம் சுட்டப்பட்டது காண்க.

## 11. தளிகை சேர்க்க

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
யாகா சுரலோ கசிகா மணியே!

**ப – ரை:** கூகா என என் கிளைகூடி அழப் போகா வகை – என் சுற்றத்தவர்கள் கூகா என்று கூடியழ யான் மரணவேதனை எய்தாதவாறு; மெய்ப்பொருள் பேசியவா – உண்மை ஞானப்பொருளை அடியேனுக்கு உபதேசித்த அற்புதம்தான் என்னே! நாகாசல வேலவ – நாககிரியாகிய திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளியுள்ள வெற்றிவேற் பெம்மானே; நாலு கவித்யாகா – மெய்யன்பர்கட்கு நால்வகைக் கவிகளையும் பாடும் புலமையைக் கொடுப்பவனே; சுரலோக சிகாமணியே – தேவர்கள் தம் தலையால் வழிபட அவர்களுடைய முடிமணியாக விளங்கும் பெருமானே! (எ – று)

**பொ – ரை:** நாகாசல வேலவ! நாலுகவித்யாகா!! சுரலோக சிகாமணியே!!! என் சுற்றத்தவர்கள் கூகா என்று கூடியழுமாறு யான் இறந்து போகாமல் தேவரீர் அடியேனுக்கு மெய்ப்பொருட் காட்சி எய்தும் வண்ணம் உபதேசித்த உமது கருணைத் திறந்தான் என்னே! எ – டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வி - ரை :** கூகா என்பன ஒலிக்குறிப்பு. மெய்ப் பொருள் - பரசிவம். "பேசியவாறு" எனற்பாலது "பேசியவா" என ஈறுகெட்டு நின்றது. வேலவ, தியாகா - இவை யிரண்டும் அண்மை விளிகள். சிகாமணியே - முன்னிலை விளி. சுரலோகம் என்பது ஆகுபெயராய்த் தேவர்களை உணர்த்தி நின்றது. நாலு கவிகளாவன ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்பன.

நாகாசலம் திருவேங்கடமலை என்பாரும் உளர். அங்கு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலிருந்ததென்று வரலாறும் உண்டு. அடிகள் காலத்திலும் அவ்வரலாறு உண்டு போலும். இதற்குச் சான்ருகக் கந்தபுராண வழிநடைப் படலத்தில்,

"அண்டம் மன்னுயி ரீன்றவ ளுடன்முனி வாகித்
தொண்ட கங்கெழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டு பாதலத் தேகியே ஓர்குகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்."

என்று கூறுவதும் காண்க.

ஞானசற்குரு நாதனருளால் சொன்ன மெய்ப்பொருட் காட்சி கைவந்த ஞானிகளை மரணம் சாராது எனத் தெளிக. ஏனையோர்கள் மரணவேதனை எய்துவர் என்பது,

'காலனு கியதோர் சேர்ப்பன்
காலமாம் வலையை வீசி
ஞாலமாம் தடத்தில் வைகும்
நல்லுயிர் மீன்கள் வாரி
ஏலவே யீர்த்து நின்றுன்
இறுதியாங் கரைசேர் காலை
மேலவன் கையிற் பட்டு
மேலிவொடு வீடு மன்றே"

என்ற கந்தபுராண வாக்காலும் உணர்க.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்ற திருக்குறளும் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. களவு வெல்க

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே.

ப – ரை: செம்மான் மகளை – அழகிய மானின் வயிற்றுதித்த வள்ளிநாயகியாரை; திருடும் திருடன் – வேடரிடமிருந்து களவொழுக்கத்தினல் கவர்ந்த கள்வனும்; பெம்மான் – பெருமையுடையவனும்; முருகன் – இளமை உடையவனும்; பிறவான் இறவான் – பிறப்பு இறப்பு இல்லாத முழுமுதற் கடவுளுமாகிய முருகப்பெருமான்: சும்மா இருசொல் அற என்றலுமே – பேச்சற்று, நினைவற்று, செயலற்றுச் சும்மா இரு என்று உபதேசித்த அளவிலே; அம்மா – என்ன அதிசயம்; பொருள் ஒன்றும் அறிந்திலனே – உலகப் பொருள் ஒன்றையும் அறியாது நின்றேன். எ – று.

பொ – ரை: வள்ளிநாயகியைத் திருடிய கள்வனும், பெருமை உடையவனும், என்றும் இளையவனும், பிறப்பிறப்பற்றவனும் ஆகிய முருகவேள் குருநாதனுக எழுந்தருளி "சும்மா இரு" என்று சொன்ன அளவிலே உலகப் பொருள் ஒன்றுந் தோன்ருமல் மறைந்து போயின. எ – டி.

வி – ரை: செம்மான் – அழகிய மான்; செம்மை – அழகு; நிறமெனினுமாம். பெம்மான் – பெருமை உடையவன்; அண்டம் ஓர் அணுவாம்படி பெருத்தவன். முருகன் – என்றும் குன்ருத இளமை உடையவன். "பிறவான் இறவான்" – பிறப்பு இறப்பற்ற நித்தியப் பொருள். சும்மா சொல்லற இருத்தல் – மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் அசைவற நிற்றல். அது திருவருளிலே தோய்ந்து தான் அதுவாம்படி நிற்றல். இந் நிலையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பெரும் பூதக்கூட்டமாகிய உலகம் தோன்றுது. இது அருள் நிலை. தேகமே நான் என்ற அனுபவம் நசித்து அருள் வெளியே நான் என்ற அனுபவம் கைவரல்; நின்மல துரியம் இதுவே.

"செம்மான் மகளைத் திருடும் திருடன்" என்றது வள்ளிநாயகியாரை மணஞ்செய்த களவொழுக்கத்தைப் புலப்படுத்தி நின்றது. இஃது அன்புபற்றிய ஐந்திணை ஒழுக்கத்துள் முதற்கண்ணின்ற குறிஞ்சித்திணை ஒழுக்கத்தை நாடகமாக நடித்துக்காட்டிய அருட்செயலாகும்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே."

என்பது சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம். சிவஞானபோதத்து எட்டாம் சூத்திரத்தின் விரிவே கந்தபுராணத்து வள்ளிதிருமணம் எனத் தெளிக.

ஆன்மாவை, இறைவன் அருட்குருவாக வந்து அடிமைகொள்வதே வள்ளி திருமணம். "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்று தொடங்கும் திருத்தாண்டகமும் ஓர்க.

## 13. இருள்வழி கடக்க

முருகன் றனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

ப - ரை: முருகன் - என்றும் இளையவனும்; தனிவேல் முனி - இணையற்ற வேல்வல்ல முனிவனும் ஆகிய குமரவேளே; நம் குரு என்று - நமது குருநாதன் என்று;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்கொண்டு அறியார் - அவனது திருவருளை முற்கொண்டு அறியமாட்டாதவர்கள்: அறியும் தரமோ - அறியும் தரத்ததோ (அன்று); உரு அன்று - உருவமும் அன்று; உளது அன்று - உள்பொருளும் அன்று; இலது அன்று - இல்பொருளும் அன்று; இருள் அன்று - இருளும் அன்று; ஒளி அன்று - ஒளியும் அன்று; என நின்றதுவே - என்று சொல்லும்படி நின்ற மெய்ப்பொருள். எ - று.

பொ - ரை: முருகப்பெருமானே என் குருநாதன் என்று தெளிந்து அவனருளை முற்கொண்டு அறியமாட்டாதவர்களால் அறியும் தன்மையது அன்று மெய்ப்பொருள். எ - டி.

வி - ரை: முருகநாமம் மிகச்சிறந்ததென்பதை திருமுருகாற்றுப்படை "அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக" என்று கூறுதலால் காண்க. "அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ?" என்பதில் ஓகாரம் எதிர்மறை. எனவே அருள்கொண்டு அறிவாரால் அறிந்து அனுபவிக்கப்படுவது மெய்ப்பொருள் என்றபடி. இதற்குச் சான்றுக.

"... அவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"

என்று திருநாவுக்கரசு சுவாமிகளும், "அவன் அருளாலே அவன்றாள் வணங்கி" என்று மாணிக்கவாசக சுவாமிகளும் கூறுவது காண்க.

"இன்புறுவார் துன்பார் இருளினெழுஞ் சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்"

என்ற திருவருட் பயனும் ஓர்க. அங்ஙனம் அறிந்து அனுபவிக்கின்ற மெய்ப்பொருளானது உரு, அரு, உள்ளது, இல்லது, இருள், ஒளி என்று சுட்டியறிய முடியாதது: அசைவற நிற்பது; சுட்டறி விறந்து வியாபக அறிவு பெற்றுத் தனக்கு அன்னியமாகக் கண்டனுபவிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. பாத தரிசனம் செய்ய

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே.

ப - ரை: கைவாய் — தன் திருக்கரத்தினிடத்தே; கதிர்வேல் - ஒளிமயமான வேற்படையைத் தரித்த; முருகன் கழல்பெற்று - முருகவேட் பெம்மானுரது திருவடிக் கமலத்தைப் பெற்று; உய்வாய் மனனே - உய்திகூடுவாய் மனமே; ஒழிவாய் ஒழிவாய் - முற்றிலும் விடுவாய், விடுவாய்; மெய், வாய் விழி நாசியொடும் செவியாம் - மெய், வாய், கண், மூக்கொடு செவியும் என்கின்ற, ஐவாய் வழிசெல்லும் அவாவினை - ஐம்பொறி வழியே செல்கின்ற ஆசைகளை எல்லாம். எ - று.

பொ - ரை: ஓ .. மனமே! நீ, ஐம்பொறி வழியே ஓடி ஓடி அலைந்து உலக இன்பங்களை நுகரவேண்டும் என்ற ஆசைகளை எல்லாம் அறவே விட்டு ஒழிப்பாயாக. வெற்றிவேல் வீரனாகிய முருகவேளுடைய திருவடிகளினிடத்தே நின்று அவன் அருளைப்பெற்று உய்வாய் ஆக. எ - டி.

வி - ரை: வாய் - ஏழனுருபு. மனனே என்பதில் னகரம் போலி; ஏகாரம் அசை. ஓடு என்ற மூன்றனுருபு உடனிகழ்ச்சிப் பொருளது. கதிர் - ஒளி, ஞானம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி வழியே பரிச இன்பம், இரச இன்பம், உருவக்காட்சி இன்பம், நறுமண இன்பம், இன்னோசை இன்பம் என்பவற்றை விரும்பி ஓடி அலைகின்ற மனமே அவ்வின்பங்கள் மெய்ம்மையான இன்பங்கள் அல்ல. ஆதலால் அவற்றை விட்டு முருகவேட் பெம்மானுடைய திருவடிச் சார்பே உண்மையான நிலையான இன்பம் ஆகும். அதனைப் பெற்று உய்வாயாக என்று மனத்தைக் கடிந்து கூறியது. யான், எனது என்னும் செருக்கற திருவருள் பதியும், திருவருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிய முருகன் திருவடி யடைதலைத் தடுத்து நிற்கும் அவா முதலிய குற்றங்கள் நீங்கும்.

ஒழிவாய் ஒழிவாய் - விரைவு பற்றிய அடுக்கு.

"கண்டுகேட் டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்பது தமிழ்மறை.

## 15. இருள்வழி கடக்க

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே!

ப - ரை: முருகன் குமரன் குகன் என்று மொழிந்து - முருகன் குமரன் குகன் என்று உன் திருநாமங்களைச் சொல்லி உன்னை நினைந்து; உருகும் செயல் தந்து - உள்ளம் உருகி அன்பு செய்கின்ற நிலையைத் தந்து; உணர்வு என்று அருள்வாய் - மெய்ஞ்ஞானத்தைத் தந்தருள்வது எந்த நாளோ; பொரு புங்கவரும் - வேத சிவாகம ஒழுக்கத்தைப் புறக்கணித்த அசுரரோடு போராடுகின்ற தேவர்களும்; புவியும் - மண்ணுலகத்தவரும்; பரவும் குருபுங்கவ - துதிக்கின்ற குருதேவனே; எண்குண பஞ்சரனே - அருட்குணங்கள் எட்டுக்கும் உறைவிடமானவரே. எ - று.

பொ - ரை: அரி பிரமேந்திராதி தேவர்களும், மனிதர்களும் துதிக்கின்ற குருதேவனே, எண் குணங்கட்கும் இருப்பிடமானவனே, முருகன், குமரன், குகன் என்று உன் திருநாமங்களைச் சொல்லி உருகுகின்ற அன்பைத் தந்து, மெய்ஞ்ஞான உணர்வைத் தருவது எந்த நாளோ. எ - டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி — ரை : எம்பெருமானே ! உன் திருநாமங்களைச் சொல்லி, உன் திருமேனியை நினைந்து உருகுகின்ற அன்பு நிலையைத் தந்து அதன் வாயிலாக மெய்ஞ்ஞானத்தைத் தருவது என்றோ என்று அடிகள் அன்புநிலையை வேண்டுகின்றார். முருகன் குகனாயினும் தனது குரு என்பதை "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" எனப் பிரார்த்திப்பதிலிருந்து அறிக.

அன்பு இறைவனை அடைவதற்கு இன்றியமையாத சாதனம். அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவனிடத்துள்ள உள்ள நெகிழ்ச்சியே. நாயகி நாயகனுடைய பெயரைக் கேட்ட உடனே உள்ளம் உருகி எப்போது என் தலைவனைக் கண்டு மகிழ்ந்து கூடுவேன் என்று ஆசைப் படுவாள். இது சிறந்த அன்பு. அதுபோல நாமும் முருகனை நினைந்து அவன் திருநாமங்களைச் சொல்லி உள்ளம் உருகுகின்ற நிலையைப் பெற்றால் அவனருளைப் பெறலாம்.

"ஆங்கவன் அருளாற் பக்திநன் குண்டாம்
பக்தியால் அவனருள் உண்டாம்
வீங்கிய பக்தி பற்பல பிறப்பில்
வேதங்க ளுரைத்திடு படியே
தீங்கறு கருமம் இயற்றிய பலத்தாற்
சிவனருள் செய்திடப் படுமால்"

என்றார் பிறரும்.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று"

என்பது தமிழ்மறை.

"என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழைந் தார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண் ணாதே"

என்பது திருமந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அன்பினு லடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா தின்னருள் தந்தாய்......"

என்பது மணிவாசகம். இத்தகைய அன்பிற்கு எடுத்துக் காட்டாக உள்ளவர் நம் கண்ணப்ப நாயனுர். இதுபற்றி யன்றே மணிவாசகரும்,

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன்"

என்றருளிச்செய்தார்.

"உள்ள முருகின் உடனுவ ரல்லது
தெள்ள அரியரென்று உந்தீபற."

என திருவுந்தியுங் காண்க.

"பொரு புங்கவரும் புவியும்" என்பதற்கு அன்பு பொருந்திய தேவரும் மனிதரும் என்பாருமுளர்.

எண்குணங்களாவன: தன்வயத்தனுதல், தூய உடம் பினனுதல், இயற்கை உணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன.

## 16. பேராசை விலக்க

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே.

ப — ரை: பேர் ஆசை எனும் பிணியில் பிணிபட்டு — பெரிய ஆசை என்று சொல்கின்ற கட்டிலே கட்டுண்டு; ஓரா வினையேன் — மெய்ப்பொருளை உணரமாட்டாத தீவினையேன்; உழலத் தகுமோ — வீணே உலைவது தகுமோ; வீரா — வீரச் செய்கையுடையோய்; முதுசூர் படவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறியும் சூரா — ஆயிரத்து எட்டு அண்டங்களை நூற்று எட்டு யுக காலமாக ஆண்ட சூரபன்மனைச் சங்கரிக்க வேலெறிந்த சூரா; சுரலோக துரந்தரனே — தேவலோக ரட்சகா. எ — று.

**பொ — ரை:** வீரா! சூரசம்மார சூரா!! தேவலோக ரட்சகா!!! கூர்ந்து சிந்தித்து மெய்ப்பொருளை அறியாத யான் பெரிய ஆசை வலையில் அகப்பட்டு உலைவது தகுமோ? எ — டி.

**வி - ரை:** சூரன் — அச்சம் தருபவன். துரம் + தரன் — துரந்தரன்; பாரந் தாங்குவோன்: துரம் — சுமை, பொறுப்பு. ஓகாரம் எதிர்மறை. பேராசை — பெரிதாகிய ஆசை.

"ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடல்மீதி லே
யாணைசெலவே நினைந்திடுவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாள் இருந்த பேரும்
நிலையாக வேயின்னும் காயகற் பந்தேடி
நெஞ்சு புண்ணுவர்"

என்று தாயுமான சுவாமிகள் கூறுவதும் காண்க.

ஆசைகள் ஒன்றன்பின் ஒன்ருக வந்து நம்மைக் கட்டுப் படுத்துவன. ஆசையால் வருவது அலைச்சல்.

'அல்கா நல்குரவு அவாவெனப் படுவது
செல்வம் என்பது சிந்தையின் நிறைவே"

என ஆசைதான் வறுமை என்ருர் குமரகுருபரர்.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனே டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே"

என்ற திருமந்திரமும் நோக்குக. முதுசூர் படவேல் எறிந்த சரிதம் கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கவர் மொழியும் வெய்யோன்
ஆற்றலுந் தெரிந்து செவ்வேள்
செங்கைய தொன்றில் வைகுந்
திருநெடு வேலை நோக்கி
இங்கிவ ஞகம் போழ்ந்தே
ஏகுதி இமைப்பி லென்னுத்
துங்கம துடைய சீர்த்திச்
சூரன்மேற் செல்லத் தொட்டான்"

என்பதனுல் உணர்க.

## 17. தன் நடத்தை மேன்மையாக

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனுற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

ப – ரை: யாம் ஓதிய கல்வியும் – யாம் நல்லாசிரியன் பால் ஓதியுணர்ந்த கல்வியும்; எம் அறிவும் – எமது இயற்கையறிவும்; தாமே பெற வேலவர் தந்ததனுல் – நாம் பெறும்படி வெற்றிவேற் பெம்மான் தாமாகவே தந்த தன்மையினுல்; பூமேல் மயல்போய் – இப்பூலோகத் துள்ளவரை மயக்கம் இன்றி; அறம் மெய் புணர்வீர் – தருமத்தையும் மெய்ப்பொருளையும் சேருவீர்; நாமேல் நடவீர் நடவீர் இனியே – நாவினுற் செய்கின்ற மேலான பாடற்றெண்டைச் செய்து அவன் சன்னிதியை நோக்கிச் செல்வீர், செல்வீர். எ – று.

பொ – ரை: யாம் கற்ற கல்வியும் இயற்கையறிவும் யாம் பெறும்படி வேலாயுதப்பெருமான் தாமாகவே கருணை கூர்ந்து தந்த தன்மையினுலே பூமியின்கண்ணே மயக்க மின்றித் தருமத்தையும் மெய்ப்பொருளையும் அடையக் கடவீர். இனி நாவினுற் செய்கின்ற மேலான பாடற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுண்டைச் செய்து அவன் சன்னிதியை நோக்கிச் செல்வீர், செல்வீர். முன்னமே பரிசிலைத் தந்துவிட்டான் இனிப் பாடிச்சென்று துதியுங்கள். எ – டி.

வி - ரை : ''மெய்யறிவு'' என்றும் பாடமுண்டு.

யாம் – தன்மைப் பன்மை. புணர்வீர், நடவீர் என்பன முன்னிலைப் பன்மைகள். அடிகள் மெய்யடியார் கூட்டத்து நின்று அறிவுறுத்தி முருகன் சன்னிதிக்கு ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது.

நாமேல் – நாவினுல் செய்கின்ற மேலான தொண்டு செய்க. ஆனுருபு விரித்துரைக்கப்பட்டது காலால் நடக்கின்ற உலக மக்களே! இனிமேல் நாவினுல் முருகனைப் பாடி நடவுங்கள் என்று உபதேசிக்கின்ருர் அருணகிரியார். நடவீர், நடவீர் என்றது விரைவுபற்றிய அடுக்குத்தொடர், மெய்யடியார்களை வழிப்படுத்துவதாக அமைந்தது.

## 18. கற்பழியாதிருக்க

உதியா மரியா உணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூ ரபயங் கரனே.

ப - ரை: உதியா மரியா – பிறவாதவரும் இறவாதவரும்; உணரா மறவா – நினைப்பு மறப்பு அற்றவரும்; விதிமால் அறியா – பிரம விஷ்ணுக்களால் தேடியும் அறிய முடியாதவரும் ஆகிய; விமலன் புதல்வா – மலரகிதராம் சிவபிரானுரது மைந்தா; அதிகா–எவ்வகைத் தேவர்க்கும் மேலானவரே; அநகா – பாவமற்றவரே; அபயா – பயம் இல்லாதவரே; அமராபதி காவல – சுவர்க்க நகர பாது காவலனே; சூர பயங்கரனே–சூரபன்மனுக்கு அச்சத்தைத் தந்தவரே. எ – று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ — ரை : சனன மரணம் நினைப்பு மறப்பு இல்லாதவரும், பிரமன் திருமால் தேடியும் காணமுடியாதவரும், மலமற்றவருமான சிவபெருமானுரது மைந்தரே ! மேலானவரே ! பாபமற்றவரே ! தேவலோக ரட்சக ! சூரபன்மனுக்கு அச்சத்தைத் தந்தவரே! எ — டி.

வி — ரை : உதியா, மரியா, உணரா, மறவா என்ற எதிர்மறைப் பெயரெச்சங்கள் விமலன் என்ற பெயரைக் கொண்டு முடிந்தன. புதல்வா, அதிகா, அநகா, அபயா, காவல, பயங்கரனே என்பவை முன்னிலை விளிகள்.

சூரசம்மாரம் செய்து தேவர் துயர்தீர்த்த கருணையாளனுகிய எம்பெருமானே ! அடியேனுடைய மலமாயை கன்மங்களைத் தீர்த்து உன் திருவருளைத் தரவேண்டும். என்பது குறிப்பு.

## 19. இல்வாழ்க்கை நீங்க

வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே !

ப — ரை : வடிவும் தனமும் - உடலழகும் திரவியமும்; மனமும் குணமும் — நல்ல மனமும் நல்ல குணமும் ; குடியும் குலமும் - உயர்குடிப் பெருமையும், உயர்குலப் பெருமையும் ; குடிபோகியவா - விட்டகன்றவாறு என்ன வியப்பு ! ; அடியந்தமிலா அயில்வேல் அரசே - ஆதியும் அந்தமும் இல்லாத கூரிய வெற்றிவேலாயுத இறையே ; மிடி என்று - வறுமை என்று சொல்லப்படுகின்ற ; ஒரு பாவி வெளிப்படினே - ஒரு பாவி வந்து வெளிப்பட்டால். எ — று.

பொ — ரை : அடியந்தமிலா அயில்வேல் அரசே மிடி என்று ஒரு பாவி தோன்றுமாளுல் வடிவும், தனமும், நல்ல மனமும், நற்குணமும், குடிப்பிறப்பின் உயர்வும், குலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையும் அடியோடு விட்டுவிலகி வேறு இடத்திற்குக் குடிபோய்விடும். எ - டி.

இறைவன் "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி."

வி - ரை: மிடி - வறுமை; நல்குரவு, இலம்பாடு இன்மை என்பன ஒரு பொருளன. இவ்வுலக வாழ்விலே ஒருவருக்கு வறுமை வந்தால் அவர்பாலுள்ள எல்லா நன்மைகளும் அகன்றுவிடும் என்று வறுமையின் கொடுமையை அடிகள் எடுத்துரைக்கின்றார். அடிகள் முற்றத் துறந்த துறவியாதலின் அவர்க்கு வறுமையால் வரும் துன்பங்கள் ஒன்றுமில்லை. இஃது உலக மக்களை நோக்கி இரங்கிக் கூறியது.

இனி, வறுமையின் கொடுமையை வள்ளுவரும்,

"இன்மை எனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்"

என்றுரைப்பர்.

குடிபோதல் - மறைதல்.

## 20. அநுக்கிரகம் பெற

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே.

ப - ரை: அரிதாகிய மெய்ப்பொருளுக்கு - அபக்குவமான மக்களால் அறிந்து அனுபவிக்க அரிதான உண்மைப் பொருளுக்கு; அடியேன் உரிதா - அடியேனாகிய யான் (அறிந்து அனுபவிக்கும்) தகுதி உடையவனாம்படி; உபதேசம் உணர்த்தியவா - ஞானோபதேசம் செய்தவாறு (என்ன அதிசயம்); விரிதாரண - உறுதியான வியாபக அறிவை உடையவனே; விக்ரம - வீர பராக்கிரமமுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனே; வேள் – எவராலும் விரும்பப்படுபவனே; இமை யோர் புரிதாரக – தேவர்கள் விரும்பும் பிரணவ சொரூப; நாக புரந்தரனே – விண்ணுலக ரட்சகா. எ – று.

பொ – ரை: உறுதியான வியாபக அறிவை உடையோய், பராக்கிரமமுடையோய், விரும்பப்படுபவரே, தேவர்கள் விரும்பும் பிரணவரூபா, விண்ணுலகரட்சகனே, எவராலும் அறியவும் அனுபவிக்கவும் எட்டாத மெய்ப் பொருளுக்கு அடியேன் உரித்தாகும்படி தேவரீர் உபதேச வாயிலாய் அறிவித்தவாறு மிகவும் அதிசயம். எ – டி.

வி – ரை: அரிதாகிய மெய்ப்பொருள் – இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்கின்ற தகுதிகளை யுடையவர்க்கன்றி ஏனையோர்க்கு அறியவும், அனு பவிக்கவும் எட்டாத உண்மைப்பொருள் – அது பரசிவன்.

உரித்தாக என்பது விகாரப்பட்டு "உரிதா" என நின்றது.

"உபதேசம் உணர்த்தியவாறு அதிசயம்," என்றது உப தேச வாயிலாக அப் பரசிவத்தை அறியச்செய்தது அதி சயம் என நின்றது. உபதேசவாயிலாகப் பரசிவத்தை உணர்த்தியது, "அப்பனே! நீ மூவகை உடம்புகளும் அல்லை. உடம்புகள் உனக்குச் சிறிது அறிவை விரித்துக் காட்டி விளக்குப்போல உபகரிப்பவை" என்றும், "அவை மாயாகாரிய மலதத்துவங்களின் கூட்டம்" என்றும்,

"விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து"

என்று திருவருட்பயனில் உள்ளவாறு விள்க்கிக்காட்டி, "அறிவுப் பொருளாகிய நீ மாயையைச் சார்ந்தால் அது வாம்படியும், சிவத்தைச் சார்ந்தால் சிவமாம்படியும் நின்று சிவபோகத்தை நுகரும் உரிமையுடையவன்" என்றும் விளக்கம் கூறித் தன் கருணையினாலே மலமாயா கன்மத் தொடர்புகள் ஒழியும்படி நயனதீட்சை, பரிச தீட்சை, மானசதீட்சை, வாசகதீட்சை செய்து சித்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தி யெய்துமாறு உபகரித்து இருதய கமல சிதாகா சத்திலே நின்று சிவபோகத்தை நுகரச்செய்தல்.

மூவகை உடம்புகளுமாவன தூலம், சூக்குமம், காரணம் என்பன. உப – சமீபம். தேசம் – இடம். இறைவனுடைய சமீபத்தில் ஆன்மாவைச் செலுத்துவது உபதேசம்.

விரிதாரண – வியாபக அறிவை உடையோய் என விளித்தது.

விக்கிரம, வேள், தாரக என்பன முன்னிலை விளிகள்.

பரசிவ லட்சணம் சர்வஞாதேத்தரம், "நித்தியமாய், சாந்தமாய், உள்தாய், நிட்களமாய், நிறைந்த சுயம்பிர காசமாய், விகற்பம் இன்றாய், எத்தும் அவியாவியமாய், அசந்தேகமாகி, இன்னதன்மை இது என்ன நியமிக்க அரிதாய், அத்துவிதமாய், விடயாதீத அகோசரமாய், அலிங்கமாய், அட்சயமாய், ஆனந்தமயமாய்ச் சத்தியம் இவ்வாறிருந்த பரசிவமும் நாமே; சற்றும் இதற்கு ஐயமில்லை, என்று அறியக் கடவன்" என்று கூறுகின்ற சிவோகம் பாவனையாம்.

## 21. திருவடி வணங்க

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே.

**ப – ரை:** கருதா மறவா நெறிகாண எனக்கு – நினைப்பு மறப்பு அற்ற தூயநிலையைக் காணும்படி அடியேனுக்கு; இருதாள் வனசம் தர – உனது திருவடித் தாமரைகளைச் சூட்டியருள; என்று இசைவாய் – என்றுதான் திருவுளம் இசைவீரோ; வரதா – வேண்டிய வரங்களைத் தருபவரே; முருகா – என்றும் இளையவரே; மயில்வாகனனே – மயில் வாகனக் கடவுளே; விரத அசுர சூர – தவபலம் மிக்க அவுணர்கோனும் சூரபன்மனை; விபாடணனே – இரு பிளவாகச் சங்கரித்தவனே. எ – று.

பொ — ரை : வரதா, முருகா, மயில்வாகனனே; விரத, அசுர, சூர, விபாடணனே; நினைப்பு மறப்பு அற்ற சுத்த நிலையை யான் அடையுமாறு உனது இரு திருவடிகளையும் தந்தருள்வதற்கு என்று திருவுளம் இசைவீரோ அறியேன். எ — டி.

வி — ரை: கருதல் — நினைத்தல்; ''கருதா மறவா நெறி'' சகல, கேவலங்களைக் கடந்த சுத்தநிலை.

கேவலம், சகலம், சுத்தம் ஆவது: உலகெலாம் ஒடுங்கிய பின்னர் ஆன்மா மூலமலத்தோடு தனித்து நிற்பது கேவலம், இது மறப்பு நிலை; சகலம் — சிருட்டிக்குப் பின் ஆன்மா உடம்புகள், தத்துவங்கள், உலகங்கள், போகங்கள் முதலியவற்றைப் பெற்றுத் தன் கன்மபலனை நுகர்ந்து வினையீட்டி யுழலும் நிலை; சுத்தம் — முத்திநிலை. இவற்றைச் சித்தாந்த நூல்கள் காரணாவஸ்தை என்று கூறும்.

''கேவலம் சகலம் சுத்தம் என்று மூன்று அவஸ்தை யான்மா மேவுவன்'' என்ற சிவஞான சித்தியாலும் உணர்க.

''இருதாள் வனசம் தர என்று இசைவாய்'' என்றது திருவடித் தீட்சையை வேண்டியது. அது ஞானகுருநாதன் சீடனுக்கு ஞானோபதேசம் பண்ணிய பின்னர் சிவத்தியானம் திடப்படும்படி தன் திருவடிகளைச் சீடனது சிரத்திலே பதித்தலாம். அது மணிவாசகப் பெருமானுக்குப் பரமாசாரிய மூர்த்திகள் உபதேசம்பண்ணிய பின்னர் திருவடித் தீட்சை செய்தமையுங் காண்க.

''பரிவால் மருவும் இங்கிவர் சென்னியில்
இருதாள் மகிழவைத் தனர்மதி நதிமுடிப்பார்''

என்று கடவுண்மாமுனிவர் கூறுவர்.

இனி அப்பர் சுவாமிகளும் சிவபிரான் திருவடி சூட்டியதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"... ... இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானுர் நல்ல வாறே"

என்று கூறுவதுங் காண்க.

இதனையே சேக்கிழாரும் பெரியபுராணத்தில்,

"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேன் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினுன் சிவபெருமான்"

என்பர்.

விரத + அசுர — விரதாசுர என இயைந்தது. "அ ஆவின்முன் அஆவரின் ஈறும் முதலுங்கெட ஆவொன்று தோன்றும்" என்பது நன்னூற் சூத்திர விதி. விரதம்—தவம். சூரபன்மன் அருந்தவஞ் செய்தவனுதலின் "விரதாசுர சூர" என்ருர். வி - வேறுபாடு; பாடனம் - வெட்டுதல்; விபாடனன் என்றது சூரபன்மனை இருகூருகப் பிளந்ததை உணர்த்திநின்றது. பாடனம் எனற்பாலது பாடணனே என விகாரப்பட்டது.

## 22. தவம்பெற

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

ப - ரை: காளைக் குமரேசன் என - இளமை மிக்க குமரஈசுவரன் என்று வாயாற் கூறி; கருதி-மனத்தால் தியானித்து; தாளைப் பணிய - திருவடிக் கமலங்களைத் தாழ்ந்து வணங்க; தவம் எய்தியவா - தக்க தவம் எனக்கு வாய்த்தது (என்ன அதிசயம்!); பாளைக் குழல் வள்ளி - பாளை போன்ற கூந்தலையுடைய வள்ளிநாயகியாரின்; பதம் பணியும் - திருவடிகளை வணங்குகின்ற; வேளை - குமரவேட் பெம்மானை; சுரபூபதி - தேவலோக நாயகனுகிய; மேருவையே - மேருமலை போன்றவனை. எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ — ரை: பாளைக்குழல் வள்ளிபதம் பணியும் வேளை, சுரபூபதி மேருவை, காளைக் குமரேசன் எனத் தியானித்து அவரது தாளைப் பணியத் தவம் எய்தியவாறு என்ன அதிசயம். எ — டி.

வி — ரை: காளை — குன்று இளமையுடையவன்; ஆண் மகன். என — என்று சொல்லி.

"எய்தியவாறு" என்பது "று" சுறுகெட்டு "எய்தியவா" என நின்றது. விகாரம்.

பாளைக்குழல் — கமுகின் விரிந்த பாளைபோன்ற குழல்.

"நறையாற்றுங் கமுகுநவ மணிக்கமுத்தி னுடன்கூந்தற்
பொறையாற்று மகளி ரென"

என்று பெரிய புராணம் கூறுவதுங் காண்க.

வேள் — எல்லோராலும் விரும்பப்படுபவன். சுரபூபதி— தேவலோகநாயகன். மேரு — பொன்மலை; பூமிக்கு நடு நாயகமாக நின்று அனைத்தையுந் தாங்குவது. உலகம், உயிர்கள் ஆகிய எல்லாவற்றையுந் தாங்குபவன் குமர வேளே யாதலின் அதற்கொப்பாக "மேரு" என்றார்.

"தாளைப் பணியத் தவமெய் தியவா"

என்றமையினாலே பூர்வதவம் இல்லாதவர்களால் குமரவேட் பெம்மானரது திருவடிகளைத் தரிசித்து வணங்கமுடியா தென்ற உண்மை வெளிப்பட்டது. அது,

"தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது"

என்ற வள்ளுவர் வாக்காலும் உணரப்படும்.

என, கருதி, பணி என்றமையினால் முறையே வாக்கி னாலும், மனத்தினாலும், காயத்தினாலும் தொண்டு செய்வது பெறப்படும்.

குமரேசன் என்று சொல்லி நினைந்து வணங்கத் தவம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. சலிகை சொல்ல

**அடியைக் குறியா தறியா மையினல்**
**முடியக் கெடவோ முறையோ முறையோ**
**வடிவிக் ரமவேல் மகிபா குறமின்**
**கொடியைப் புணருங் குணபூ தரனே !**

ப — ரை: அடியைக் குறியாது — எம்பெருமானே! தேவரீரது திருவடிக் கமலங்களைத் தியானம் செய்யாமல்; அறியாமையினல் முடியக்கெடவோ — அடியேன் அறியாமையினல் முற்றாகக் கெட்டு அழியவோ; முறையோ முறையோ — இஃது நியாயமோ? நியாயமோ? (அன்று); வடிவிக் ரமவேல் மகிபா — கூரிய வீர பராக்கிரமம் மிக்க வேலாயுதக் கடவுளே; குறமின் கொடியைப் புணரும் — மின்னற்கொடிபோன்ற குறக்குல வள்ளிநாயகியாரைப் புணருகின்ற; குணபூதரனே — குணமலையே. எ — று.

பொ — ரை: கூரிய வெற்றிவேலாயுதப் பெருமானே! வள்ளி மணவாளா!! குணமலையே!!! உமது திருவடிக் கமலங்களைத் தியானியாது அஞ்ஞானத்தினல் அடியேன் முற்றாகக் கெடலாமோ? இது உன் கருணைக்கு முறையாமோ? முறையாமோ? எ — டு.

வி — ரை: அடி — சாதியொருமை. இறைவனது வலது திருவடி — ஞானசக்தி; இடது திருவடி — கிரியாசக்தி; ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளன; வடி — கூர்மை; விக்ரமம் — வீரபராக்கிரமம்; மகிபன் — அரசன்; மகி — பூமி; குறமின் கொடி — மின்னல் கொடிபோன்ற வேடர் மகள்; இது வள்ளிநாயகியைக் குறிக்கும். திருமாலின் கண்ணிற் ரோன்றிய சுந்தரவல்லி முருகனை வழிபட்டு அவரது கருத்துப்படி மான்வயிற்றில் தோன்றி குறவர் குடியில் வளர்ந்தார். குணபூதரன் என்பதற்கு "எண்குண பஞ்சரனே" என்றதற் குரைத்தாங் குரைக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானகுருநாதா! உமது திருவடிகளைத் தியானப் பொருளாகத் தந்து, அஞ்ஞானத்தை அகற்றி, மெய்ஞ் ஞானத்தைத் தந்து உய்யக் கொண்டருள வேண்டும் என்பது குறிப்பு.

## 24. மாதர் வலையிலகப்படாதிருக்க

சூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே.

ப – ரை: சூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே சேர்வேன் – கூரிய வேல் போன்ற கண்களை உடைய மங்கையர்களது தனங்களிலே சேர்பவனாகிய தீயேன், அருள் சேரவும் எண்ணும் அதோ – தேவரீரது திருவருளிலே தோயவும் நினைக்கலாமோ (தகாது), சூர்வேரொடு– சூரபன்மனையும் அவனது குலம் முழுவதையும், குன்று – கிரவுஞ்ச மலையையும், தொளைத்த – சங்காரம் செய்த, நெடும் போர்வேல – நீண்ட பெரிய போர்த் தொழிலை நிகழ்த்திய வேலாயுதப் பெருமானே, புரந்தர பூபதியே- இந்திரலோக நாயகா! எ – று.

பொ – ரை: சூரபன்மனையும், அவன் குலத்தையும், கிரவுஞ்சத்தையும் பிளந்த வெற்றிவேற் பெருமானே, இந்திரலோக நாயகா, மங்கையர் கொங்கையிலே சேர் பவனாகிய தீயேன் உன் திருவருளிலே சேரவும் எண்ணு வது தகுமோ. எ – டி.

வேல்விழி – உவமைத் தொகை.

மங்கையர் எனப் பன்மையிற் கூறியவதனால் பொருட் பெண்டிர் என்பது பெறப்பட்டது.

"பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்
இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ யற்று"

என்ற வள்ளுவர் வாக்கும் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது — பகுதிப் பொருள் விகுதி, ஓகாரம் — எதிர்மறை விகுதி. வேர் — வம்சம். ஐம்புல நுகர்வுகளும் ஆண்களுக்கு ஒருங்கே மங்கையரிடத்து உளவாதலின் இம்மையல் வலைப் பட்டு அருள்பெற முடியாது பலர் அழிகின்றனர்.

மங்கையர் மயல் நீங்காத சிறியேன் உன் திருவருளைப் பெற எண்ணுவது தகுதியன்று என்று தம்முடைய தகுதி யின்மையை நினைந்து அடிகள் வருந்துகின்றார்.

பிறரெவராலும் வெல்ல முடியாத சூரனையும், கிரவுஞ் சத்தையும் துளைத்த வேல்வல்ல எம்பெருமானே! தேவ ரீரே! என்னுடைய மங்கையர் மையலைத் தீர்த்து உமது அருளைத் தரவேண்டும் என்பது குறிப்பு. சூரபன்மன் — ஆணவமலம், குன்றங்கள் — சஞ்சித வினைகள், வேல் — ஞானம். ஞானம் ஒன்றினால் ஆணவத்தையும் சஞ்சித வினையையும் அழிக்கலாம். கூர்வேல், போர்வேல் என்ப வற்றின் சொன்னயத்தைக் காண்க.

## 25. மகாவினை

**மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்**
**தையோ வடியே னலையத் தகுமோ**
**கையோ வயிலோ கழலோ முழுதுஞ்**
**செய்யோய் மயிலே றியசே வகனே.**

ப — ரை: மெய்யே என — இது மெய்மையானதே என்று, வெவ்வினை வாழ்வை உகந்து — கொடிய கன்ம சம்பந்தமான வாழ்க்கையை எண்ணி மகிழ்ந்து, ஐயோ — ஐயகோ, அடியேன் அலையத் தகுமோ — தேவரீருக்கு அடிமைப்பட்ட சிறியேன் அலைவது உமது பெருமைக்குத் தகுமோ, கையோ அயிலோ கழலோ முழுதும் — திருக் கரங்களும், வேலும், திருவடிகளும், திருமேனி முழுவதும், செய்யோய் — சிவந்த அருள் வள்ளலே, மயில் ஏறிய சேவ கனே — சூரனும் மயிலை ஆரோகணித்த வீரமூர்த்தியே. எ — று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ - ரை : கையும் வேலும் திருவடியும் மாத்திர மல்ல, மேனி முழுவதும் சிவந்த அருள் வள்ளலே, மயில் வீரனே, உன் அடியேன் கொடிய கன்மவாழ்க்கையை என்றும் நிலைபேறு உடையதாகக் கருதி மகிழ்ந்து ஐயோ அலையத்தகுமோ. எ – டி.

ஏகாரம் – தேற்றம்.

தகுமோ என்பதிலுள்ள ஓகாரம் – எதிர்மறை.

கையோ, அயிலோ, கழலோ என்பவற்றுள் ஓகாரம் எண்ணுப் பொருளன.

வெவ்வினை – கொடிய வினை

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்ற வள்ளுவர் வாக்கில் இருள்சேர் இருவினை என்றது போலவே மீண்டுப் புண்ணியத்தையும் சேர்த்து வெவ்வினை என்றார். புண்ணியமும் பொன்விலங்கு போல மெய்ப் பொருட் காட்சிக்குத் தடையாதல் பற்றியே யென்க.

வினை, கன்மம் என்பன ஒருபொருட் சொற்கள்.

வினைவாழ்வு – பூர்வவினைப்பயனை நுகர்ந்து கழிக்க வந்த வாழ்வு.

"வினைப்போக மேஒரு தேகம் கண்டாய்
வெய்யவினை தான் ஒழிந்தால்
தினைப்போ தளவும் நில்லாது தேகம்"

என்பது பட்டினத்தடிகள் வாக்கு. நாம் நமது அறியாமை யினாலே மேலும் வினையை ஈட்டுகின்றோம். வினை சம்பந்த மான எமது வாழ்வு நித்தியமானது போலக் காணப்படு கிறது. ஆனால் ஊன்றிச் சிந்திக்கின் அதன் நிலையாமை புலனும்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்னும் குறளாலும் அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினை சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என மூன்ரும். சஞ்சிதமாவது சென்மாந்தரங்கள் தோறும் ஈட்டப்பட்டு அனுபவத்துக்கு வராமல் இருப்பது. இது ஞாஞசாரியஞல் சட்சு தீட்சை செய்து எரிக்கப்படுவது. பிராரப்தமாவது சஞ்சிதத்திற் பக்குவமான ஒரு பகுதியை எடுத்துக் கொடுத்து ஒரு தேகத்துக்கு என நியமிக்கப்படுவது. இது அனுபவித்தாலன்றித் தீராது. தேகநீக்கத்துடன் தீரும். மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பரமாசாரிய மூர்த்திகள் திருவடித் தீட்சை செய்து ஆட்கொண்ட பின்னரும் அரசனது தண்டனைக்குள்ளான செய்தியால் விளங்கும். ஆகாமியமானது, எடுத்த பிறப்பிலே யான் என்னும் முனைப்பிஞல் ஈட்டப்படுகின்ற புது வினை. இது ஞானகுருநாதனுடைய அருட்சக்தி பதிந்து நின்று சார ஒட்டாது தடுக்கப்படுவது. இம் மூவகை வினைகளையும் சேர்த்துக் கன்மமலம் என்பர் அறிஞர்.

"விரிந்தசஞ் சிதவினைகள் அன்புடன் நாம்விழிக்க
வெந்தன விரவும் இப்பிறப்பிற்
பொருந்தும் வல்வினை உடலுடன் அகலும்
புந்திசேர் அருள்வரு வினைபோக்கும்........"

என்று பரமாசாரிய மூர்த்திகள் மணிவாசகப் பெருமானுக்கு உபதேசம் செய்த நிகழ்ச்சி திருவாதவூர்ப் புராணத்துக் கூறுதலாலும் உணர்க.

'வாழ்வையுகந்து அலையத்தகுமோ,' என்றமையினுலே மாயாகாரியமாகத் தோன்றிய போகபோக்கியப் பொருள்களிலே பற்று வைத்து, அவற்றைத் தேடி அலைந்து அநுபவிக்கின்ற நிலை தகாது என்றபடி. இது மனைவி, மக்கள், சுற்றம், நண்பு, வீடு, காணி, பொன், நெல் முதலிய பலவகை. இவற்றை அநுபவிக்க ஆசைப்பட்டு, அவற்றைத் தேடமுயன்றும், தேடியும் தேடாமலும் அலைந்து திரிவது பயனற்ற வீண் முயற்சி என்று தெளிந்த அடிகள் "ஐயோ அடியேன் அலையத் தகுமோ" என்று வேண்டுகின்ருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்ற கண்களுக்கும் மனத்துக்கும் அருளானந்தத்தைத் தருகின்ற உனது சிவத்திரு மேனியையும் செவ்வேலையும் தரிசித்து நிலையான இன்பத்தைப் பெறுமல் மாயா போகங்களிலே ஆசை வைத்து அலைய என்னை விடுவது உனது வீரச்செய்கைக்குத் தகாது என்றவாறு.

மயிலேறிய சேவகன் எனவே பிறரெவராலும் பொருது வெல்ல அரிய சூரபன்மனைப் பொருது வென்று மயிலூர்தியாக்கிய வீரச்செய்கை சுட்டப்பட்டது.

## 26. யாருமற்ற பேர்க்கு ஆதாரமாக

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே.

ப - ரை: ஆதாரம் இலேன் - தேவரீரது திருவடிக் கமலங்களை யன்றி வேறு ஆதாரமற்றவனாகிய சிறியேன், அருளைப் பெறவே - உமது திருவருளைப் பெறும்படி, நீதான் - அருள் வள்ளலாகிய தேவரீரே; ஒரு சற்றும் நினைந்திலையே - ஒரு சிறிதேனும் திருவுளம் செய்திலீரே; (இது தகுமோ) வேத ஆகம ஞான விநோத - வேதசிவாகம ஞானலீலையைப் பண்ணுகின்ற ஞானகுருநாதா; மன அதீதா - மனத்துக்கு எட்டாதவரே; சுரலோக - சுவர்க்கவாசிகளான தேவர்கட்கு; சிரோமணியே - முடிமணி போன்றவனே. எ - று.

பொ - ரை: வேத ஆகம ஞான விநோதா, மனோதீதா, சுரலோக சிகாமணியே, ஆதாரமிலேன் உன் அருளைப் பெற நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே. இது தகுமோ? அன்று. எ - டி.

வி - ரை: நாம் ஊன்றி விசாரித்தால் நமக்கு இறைவனுடைய திருவடிகளேயன்றி வேறு பற்றுக்கோடெதுவும் இல்லை யென்பது புலனாகும். அங்ஙனம் ஆகவும் அதனைத் தெளியாது நிலையற்ற பிரபஞ்ச வாழ்விலேயே மனம் வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து, இறந்து, பிறந்து, உழன்று பிறவிக்கடலில் அகப்பட்டுப் பற்றுக்கோடெதுவுமின்றி முத்திக்கரை யேறமாட்டாத துன்பநிலையை உன்னி உன்னி இரங்கிய அடிகள் ''ஆதாரம் இலேன் அருளைப் பெறவே நீதான் ஒருசற்றும் நினைந்திலையே'' என நம் நிலையைத் தம்மேல் வைத்து முருகப்பெருமானை வேண்டுகின்றார்.

இதுபோலவே நம் மணிவாசகப் பெருமானும்,

"தனியனேன் பெரும்பிறவிப் பவ்வத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றேன் றின்றி
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
......................................................."

என்றார்.

வேதாகம ஞான சம்பாஷணை செய்து தன் அன்பரை முத்தராக்கும் கருணைச் செய்கையை நினைந்து ''வேதாகம ஞான விநோதா'' என விழித்தார், பசுகரணங்களின் முயற்சிக்கு எட்டாத பெருமை நோக்கி, ''மநோதீதா'' என விளித்தார். சூரசம்மாரம் செய்து, தேவர் துயர் துடைத்து, விண்ணுலகை மீட்டும் சிருட்டிப்பித்து இந்திர தேவனை முடியணிவித்து ரட்சித்த கருணையை நினைந்து சுரலோக சிகாமணியே யென்றார்.

வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையைப் போதித்துப் பக்தர்களை முத்தராக்கிப் பசுகரணங்களுக்கு எட்டாது நின்று தேவர்துயர் துடைத்த கருணையாளனாகிய தேவரீருக்கு அடியேன் உமது அருளைப் பெறவேண்டுமென்று நினையாதிருப்பது தகாது என்பது குறிப்பு.

ஆதாரம் – பற்றுக்கோடு; ஒருசற்று – மிகச் சிறிதளவு; வேதம் – இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்; ஆகமம் – காமிகம் முதல் வாதுளம் இறுதியாக 28ஆம்; சுரலோகம்– இடவாகுபெயராய்ச் சுரரை உணர்த்தும்.

நினைந்திலையே – என்பதில் ஏகாரம் வினா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. பாக்கியத்தை விதிவழி அனுபவிக்க

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே.

ப - ரை : மின்னே நிகர் வாழ்வை - தோன்றி உடனே மறையும் மின்னலை ஒத்த நிலையற்ற வாழ்வை; விரும்பிய யான் - நிலையுடையதென்று ஆசைப்பட்ட சிறியேன்; என்னே - என்னென்று சொல்லுவேன் அதன் நிலையாமையை; விதியின் பயன் இங்கு இதுவோ - என் விதிப்பயன் இவ்வுலகில் இப்படியானதே; பொன்னே — பொன்னை ஒத்தவரே; மணியே - மாணிக்கத்தை ஒத்தவரே; பொருளே - மெய்ப்பொருளே; அருளே - அருளுருவானவரே; மன்னே- அசையாதநிலைப்பொருளே; மயில் ஏறிய வானவனே-மயில் வாகனத்தை ஊரும் சிதாகாசரூபமானவரே. எ - று.

பொ - ரை : பொன்னே!, மணியே!, பொருளே!, அருளே!, மன்னே!, மயிலேறிய வாகனனே!, நிலையற்ற உலக வாழ்வை விரும்பியயான். அதன் நிலையாமையை என்னென்று சொல்வேன்? என் விதிப்பயனிதுவோ? எ-டி.

வி — ரை : மின்னே - என்பதில் ஏகாரம் பிரிநிலை. நிலையாமையை உடைய வேறு பொருள்களில் நின்றும் மின்னலைப் பிரித்தலால்.

இதுவோ - என்பதில் ஓ வினாப்பொருளில் வந்தது.

ஏகாரம் - வினா.

ஊழ்வினை வலியது என்பதைக் கச்சியப்ப சிவாச்சாரியாரும்,

''முதிதரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் மன்ன ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்''

எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்-மெய்ப்பொருள், போகபோக்கியப் பொருள் கள் எனினும் ஆம்,

பொன்னும் மணியும் தம்மை உடையார்க்கு வேண்டிய போக போக்கியப் பொருள்களையெல்லாம் கொடுப்பது போல, முருகவேட் பெம்மானும் தம்மை உபாசிப்பவர்கட்கு வேண்டிய செல்வப்பொருள்களை எல்லாம் கொடுத்து உபகரிக்கும் வள்ளற்றன்மையுடையாரென்பது போதர ''பொன்னே மணியே'' என்றார்.

வானவன் – சிதாகாச சொரூபன்.

சிதாகாசம் – ஞானவெளி.

## 28. தான் அவன் ஆக

ஆனா வமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.

ப – ரை : ஆனா அமுதே – கெடுதல் இல்லாத சாவா மருந்தே; அயில்வேல் அரசே – கூரிய வேல்வல்ல அரசே; ஞானாகரனே – ஞானத்திற்கு இருப்பிடமானவனே; நவிலத் தகுமோ – சொல்லமுடியுமோ (முடியாது); யானாகிய என்னை விழுங்கி – யான் என்னும் ஆணவ முனைப்பில் அழுந்தியிருக்கும் ஆன்மாவாகிய என்னை, எனது சீவபோதத்தைப் போக்கி, தன் வியாபகத்துள் அடக்கி; வெறும் தானாய் – வேறு ஒன்றோடுந் தொடர்பின்றி எல்லாம் தானே யாய் தனித்து; நிலைநின்றது–அசையாது நிலைத்து நின்றது; தற்பரமே – அப்பரம சிவமே. எ – று.

பொ – ரை : ஆனா அமுதே, அயில்வேல் அரசே, ஞானா கரனே, யானாகிய என்னை விழுங்கி, வெறும் தானாய், நிலை நின்றது தற்பரம். அது நவிலத் தகுமோ. எ–டி.

வி – ரை: ஏனைய சாவா மருந்துகளெல்லாம், எடுக்க எடுக்கக் குறைந்து ஒருகாலத்திலே இல்லையாய் விடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகவேள் என்கின்ற சாவா மருந்து கெடுதல் இல்லாத நித்தியப் பொருளாய் இருந்து எத்தனை பேர் உட்கொண்டாலும் குறைவுபடாது அவர்களை எல்லாம் அமிர்தத்துவம் என்னும் முத்திப்பேற்றின்கட் செலுத்துதலால் 'ஆறு அமுதே' என்றார்.

பலவேறு வகைப்பட்ட தெய்வப்படைகளுக்கெல்லாம் தானே நாயகமாய், அவற்றைத் தன் ஆணைக்குட்படுத்தி ஆளும் சக்தி வாய்ந்த வெற்றிவேற் படைக்கலத்தினை, தன் திருக்கரத் தெடுத்துத் தேவர் சிறைமீட்டுச் சுவர்க்க வேந்தனை முடிசூட்டி யரசனாகும்படி செய்த வீரச் செய்கையை யுன்னி 'அயில்வேல் அரசே' என்றார்.

தம்மை உபாசிக்கும் மெய்யன்பர்கட்கு வேண்டிய வேண்டிய போகங்களையெல்லாம் கொடுப்பதோ டமையாது. ஞானத்தையும் உபதேசித்து ஞானவான்களாம்படி செய்கின்ற கருணையை நினைந்து, ''ஞானாகரனே'' என்றார். அமுதே! வேலரசே! ஞானாகரனே! என்னும் மூன்று சொற்களாலும் முருகனது சத்து, சித்து, ஆனந்தம் என்ற தன்மைகளைக் குறிப்பிட்டார்.

ஞானகுரு நாதனும் முருகவேட் பெம்மானாரது திருவருளினாலே, தன்தேகக் கூறுகளாகிய தத்துவங்களையெல்லாம் தானல்ல என்று கண்டுகழித்துக்கொண்டு போய்த் திருவருள் வியாபகத்திலே அழுந்தி நின்று ஆனந்தித்துப் பின்னர் பரசிவத்தாலீர்க்கப்பட்டு உட்சென்று அப்பரசிவ வியாபகத்துள் அடங்கி நின்றபோழ்து, அது தன்னை விழுங்கியதும் ஒரு பற்றுமின்றிச் சுத்தமாய் அசையாது நின்றநிலையையும் கண்டு, ''யானாகிய என்னை, விழுங்கி வெறும் தானாய் நிலைநின்றது தற்பரமே'' என்றார். இதனையே ''எல்லாமற என்னை இழந்த நலம்'' என்று முன்னே குறிப்பிட்டார். இத்தகைய சிவசொரூப சமாதி நிலையில் உதிக்கின்ற ஆனந்தம் வாயினாற் சொல்லமுடியாதது என்பது தோன்ற 'நவிலத் தகுமோ' என்றார். அதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன்ம ணாளனோ டுடிய
சுகத்தைச் சொல்லெனச் சொல்லுவ தெங்ஙனம்''

என்ற திருமந்திரமும் உணர்த்தும்.

நவிலத்தகுமோ—என்பதில் ஓ எதிர்மறைப் பொருளது.
ஞான + ஆகரன் = ஞானாகரன்.

## 29. கடவுள்முன் கோப மாற்ற

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

ப - ரை: இல்லே எனும் மாயையில் இட்டனைநீ - இல்வாழ்வென்னும் மாயவலையிலே அடியேன் சிக்குண்ணும்படி விட்டீரே (ஞானகுருநாதா): பொல்லேன் அறியாமை பொறுத்திலையே - தீயேன் அறியாமையினால் செய்த பிழைகளைப் பொறுத்திலீரே; மல்லேபுரி - மற்போரையே விரும்பிச் செய்கின்ற திரண்ட; பன்னிருவாகுவில் - பன்னிரண்டு திருப்புயங்களிலும்; என்சொல்லே புனையும் - அடியேன் தொடுத்த சொல்மாலையையே விரும்பியணிகின்ற சுடர் வேலவனே - ஒளிபொருந்திய வேலாயுதக் கடவுளே. எ—று.

பொ - ரை: மற்போரை விரும்புகின்ற பன்னிரு திருப்புயங்களிலும், அடியேன் தொகுத்த பாமாலையை விரும்பி யணிகின்ற வேல்வல்ல கடவுளே, இல்வாழ்வென்னும் மாயையில் என்னைத் தள்ளி விட்டீரே! தீயேன் அறியாமையினால் செய்த குற்றங்களைப் பொறுத்தலாகாதோ? இது தகுமோ? எ—டி.

வி - ரை: இல் - மனைவி. 'புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை......' என்னும் குறளிலும், இல் - மனைவி என்னும் பொருளில் வருதல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியோடு கூடிவாழும் வாழ்க்கை மாயவாழ்க்கை. ஆதலின் 'இல்லையெனும் மாயை' என்றார். 'மாயையில் இட்டனை நீ' என்றமையினாலே கன்ம போகங்களை விரும்பி நுகருமாறு செலுத்துகின்ற மறைத்தற்றொழில் சுட்டப் பட்டது.

மறைத்தலாவது, ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருவதற்காக மாயாபோகங்களை நுகருமாறு தூண்டிவிடுவது. இது சகல நிலை.

இந்நிலையில் மாயா போகங்களை நுகர்ந்து வெறுத்தவர்களுக்குத்தான் திருவருளில் ஆசைஉண்டாகும். ஆன்மாவானது அதனால் சுத்தநிலை யெய்தி திருவடியநுபூதி பெறும். "பொல்லேன் அறியாமை பொறுத்திலையே" என்றமையினாலே, மாயாகாரியமாகிய உலகபோகங்களில் நிலையான இன்பம் இல்லையென்பதை உணரமாட்டாத என் அறியாமையைப் பொறுத்து அருள்செய்யாதிருப்பது உனது அருட்குணத்துக்குத் தகாது என்ற குறிப்பு வெளிப்பட்டது.

மல்லேபுரி பன்னிருவாகு என்றது புயபல பராக்கிரமத்தையுணர்த்தி நின்றது; "மற்பொரு திரள்புய மதயானை" எனத் திருப்புகழ் பகரும். 'என்சொல்லே புனையும்' என்றமையினால் செந்தமிழ்ப் பாமாலையால் தன்னைப் பாடித் துதிப்பவர்கட்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கின்ற வள்ளற்றன்மை சுட்டப்பட்டது. "முத்தமிழால் வைதாரையு மங்கு வாழவைப்போன்" என்று கந்தரலங்காரம் கூறும். இன்னும்,

"அடிமை சொலும்சொல் தமிழ்ப்ப னிரொடு பரிமளமிஞ்சக் கடப்பமாலையும் அணிவோனே" எனத் திருப்புகழிலும் காண்க.

'சுடர்வேலவனே' என்றது எத்தகைய மாய இருளையும் போக்கவல்ல வேற்படையை உடையோய் என்று விளித்தது.

சுடர்வேல் – பிரகாசம் மிக்க வேல், மலமாய இருளையோட்டவல்ல வேல். அது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏயென முருகன் தொட்ட இருதலை படைத்த ஞாங்கர்
ஆயிர கோடி என்னும் அருக்கனில் நிகழ்ந்து தோன்றித்
தீயமுற் சிகழி கான்று சென்றிட அவுணன் கொண்ட
மாயிருள் உருவ முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே.

என்ற கச்சியப்பர் கூற்றுலும் காண்க.

## 30. வழக்குப்பேச

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

ப – ரை: செவ்வான் உருவில் திகழ்வேலவன் – அந்தி நேரத்தில் தோன்றும் செவ்வானம்போற் சிவந்த அழகிய அருளுருவத் திருமேனி கொண்டு விளங்கிய வெற்றிவேற் பெம்மான்; அன்று – அடியேனுக்கு அருள் செய்த அந் நாளில், ஒவ்வாதது என – இஃது உவமையற்றது என்று திருவாய்மலர்ந்தருளி; உணர்வித்தது தான்–உபதேசத்தால் உணர்த்திய சிவாநுபவம் ஆனது; அவ்வாறு அறிவார் – அம்முறையாக உபதேசமுறையில் அறிகின்ற அநுபூதி மான்கள், அறிகின்றது அல்லால் – அறிந்து அநுபவிப்பதே யல்லாமல்; எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே – தகுதி யற்ற ஒருவர்க்கு அவ்வனுபவத்தை எப்படி அறிவிக்க முடியும்? முடியாது. எ – று;

பொ – ரை: செந்நிறத் திருமேனியை உடைய, பரம சற்குருநாதனும் வெற்றிவேற் பெம்மான் எனக்குக் குரு வடிவாய் வந்து அருள் தந்தபோது "நிகரற்றது இது" என்று உணர்த்திய அநுபவமானது, உள்ளுணர்வால் அப் படியேயறிந்து அனுபவிப்பவர்கள் உணர்வதேயன்றிப் பிறரொருவருக்கு வெறும் வார்த்தைகளால் எங்ஙனம் அதனைஉணர்த்தமுடியும்? எ – டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகால் தரிசித்தவர்களுடைய உள்ளங்களையெல்லாம், பிறவிடயங்களிற் செல்ல ஒட்டாது வசீகரித்துப் பேரழகு செய்து நிற்பவன் செந்நிறத் திருமேனி அறுமுகத் தமலன் என்பது போதர 'செவ்வான் உருவில் திகழ்வேலவன்' என்றார். அதனை,

"செந்நி றத்திரு மேனியும் திருமுக மாறும்
அன்ன தற்கிரு தொகையுடைத் தோள்களு மாக
முன்ன வர்க்குமுன் னாகிய பராபர முதல்வன்
தன்னு தற்கணு லொருதனிக் குமரனைத் தந்தான்"

என்ற கந்தபுராணச் செய்யுளும் உணர்த்தும்,

ஒவ்வாதது – உவமையற்றது, நிகரற்றது.
உணர்வித்தது – சிவானுபவம்.

சிவானுபவமானது, மலபரிபாகமெய்திய ஆன்மா தன் இருதய கமல சிதாகாசத்தேயுள்ள பரசிவத்தோடு ஐக்கியப்பட்டு நின்று சிவபோகத்தை நுகர்வது.

அதைப்போன்ற இன்பம் வேறு இல்லாமையினாலே 'ஒவ்வாதது' எனப்பட்டது: தலைவி தலைவனைக் கூடியனுபவித்த சுகத்தினை எப்படிப் பிற கன்னியர்க்குச் சொல்ல முடியாதோ அதுபோல என்க.

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்".

— திருமந்திரம்

## 31. கடவுள் முன்னிலையில் ஞானம் பெற

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப — ரை: பாழ்வாழ்வு எனும் — பாழான (ஒரு பயனு மற்ற) உலக வாழ்வு என்று சொல்லப்படுகின்ற; இப் படு மாயையிலே — இந்த மாயைப் படுகுழியிலே: விழ்வாய்என— விழ்ந்து உழலக்கடவை யென்று; என்னை விதித்தனையே — என்னை நியமித்தீரே, இதுதகுமோ; தாழ்வானவை செய் தனதாம் உளவோ — அடியேன் இழிந்த பாவங்கள் ஏதும் செய்ததுண்டோ; வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே — இனி மயில்வாகனக் கடவுளே நீர் வாழும். நான் கெட்டுப் போகின்றேன்.

பொ — ரை: மயில்வாகனக் கடவுளே பாழான மாய வாழ்வென்னும் படுகுழியிலே வீழ்வாய் என்று என்னை நிய மித்தீரே, அடியேன் இழிந்த பாவங்கள் ஏதும் செய்த துண்டோ அறியேன். நீர் வாழ்ந்துபோவீர், யான் கெட்டுப் போகின்றேன். எ — டி.

வி — ரை: பாழ் — பயனற்றது, வீண். பிறந்து இறந்து மீட்டும் பிறந்து இறந்து உழன்று வருந்துவது. இப் பிரபஞ்ச வாழ்வு ஆராய்ந்து பார்க்கில் ஒரு பயனற்றது. ஆதலின் பாழ் வாழ்வு என்றார். நமது உடல்களும் உலகங்களும் அநு பவப் பொருள்களும் எல்லாம் மாயையில் நின்றும் வரு பவை, நிலையற்றவை (தனு, கரண, புவன, போகங்கள்) ஆதலின் படுமாயை என்றார்.

"தந்தைதாய் தமர்தாரம் மகவெனு மிவையெலாம்
சந்தையிற் கூட்டம் இதிலோர்
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்திர சாலம்"

என்றார் தாயுமான அடிகள்.

மேற்செய்யுளில் சிவானுபவத்தை எய்திய அடிகள். அதற்குமுன் தாம் மாயவாழ்விலே சிக்குண்டு வீணேயுழன்று காலத்தை வீணே கழித்தமையை எண்ணி வருந்தி முருக வேட் பெம்மானை முன்னிலைப்படுத்தி இவ்வாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது,

"..............................................................................

அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்

வாளாங் கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே",

என்ற சுந்தரர் கூற்றுப் போன்றது.

## 32. கொலை மறக்க

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே.

ப - ரை: கலையே பதறிக் கதறி - சாத்திரங்களையே விரைந்து வாயாலுரக்கப் பேசி; தலை ஊடலையே படுமாறு- முதன்மையான விரோத வாதத்தையே மேற்கொண்டு, அதுவாய் விடவோ - அத்தர்க்கவாதமயமாய் அடியேன் ஆகலாமோ (ஆகாது); கொலையேபுரி-கொலையையே செய்கின்ற; வேடர் குலப்பிடிதோய் - வேடர் மகளாய் வளர்ந்த பெண்மானைப்போன்ற வள்ளிநாயகியார் அணைந்து மகிழ்கின்ற; மலையே - மலைபோன்றவனே; மலைகூறிடு வாகையனே - கிரவுஞ்ச மலையைப் பிளந்து வெற்றி பெற்றவனே எ - று.

பொ - ரை: வள்ளி மணவாளா, கிரவுஞ்ச சம்மாரா, அடியேன் சாத்திரங்களைக் கற்று, விரைந்து பேசி, எவரையும் விரோதித்துத் தர்க்கம் பண்ணி, அதே மயமாய்ப் போகலாமோ? எ - டி.

வி - ரை: சமயசாத்திரங்களைக் கற்றுத் தர்க்கம் பண்ணித் தர்க்கவாதியாவதிலாம்பயன் ஒன்றும் இன்று. ஞாசாரியன் பால் ஞானநூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, நிட்டைகூடுவதே பயனுடைச் செய்கை என்பது கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாத்திரம் பல பேசும் சளக்கர்காள்
கோத்திர மும்குல மும்கொண்டென் செய்வீர்
மாத்திரைப் போதுள்ளே மறித்து நோக்குமின்
கூத்தனைக் காணும் குறியது வாகுமே"

என்று அப்பர் சுவாமிகளும், 'மலைபோல் வாதப் பெற்றியரும் வாய்வாதப் பேயராக' என்று தாயுமான சுவாமிகளும், 'சமயவாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றி மலைந்தனர்' என்று மணிவாசகப் பெருமானும் வெறும் வாதம் பயனற்றது என்று கூறுவது காண்க.

கலை – சமயநூல். பதறல் – விரைதல். கதறல் – உரத்துப் பேசல். ஊடல் – விரோதம்.

விடவோ – என்பதில் ஓகாரம் எதிர்மறை. வள்ளிநாயகியாரைப் பிடி என்பதற்கியைய முருகவேளை மலை என்றார், "காட்டூர் கடலே" "கடம்பூர் மலையே" என்பர் அப்பர் சுவாமிகள். பிடி – பெண்யானை. ஓசையின்றி நடப்பது– அதுபோன்று பெண்களும் ஓசையின்றி நடக்கவேண்டும்.

மலையின் சாரலில் வாசம் பண்ணுவது யானையாதலின் இங்ஙனம் கூறினார்.

கலைகளைக் கற்று வாதிட்டு அலையாமல் திருவடியனுபூதியைத் தந்தருள்வாய் வள்ளி மணவாளா என்று அருணகிரிநாதர் அங்கலாய்ப்புடன் வேண்டுகின்றார்.

## 33. வியாகுலம் ஒழிக்க

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே.

ப – ரை : சிந்தாகுலஇல் ஒடு செல்வம் எனும் – மனத்தில் துன்பத்தை உண்டுபண்ணுகின்ற மனைவியோடு செல்

வம் என்று சொல்லுகின்ற; விந்தாடவி என்று விடப்பெறு வேன் — ஆச்சரியமான காட்டை எப்பொழுது கடப்பேன்; மந்தாகினி தந்த வரோதயனே — கங்காநதியால் தோற்று விக்கப்பட்ட வரப்பிரசாதரூபனே; கந்தா — கந்தவேளே; முருகா — முருகப்பெருமானே; கருணாகரனே — கிருபைக்கு உறைவிடமானவனே. எ — று.

பொ — ரை: கங்கா சுதனே, கந்தா, முருகா, கருணா நிதியே மனக்கிலேசத்திற்கு ஏதுவான மனைவி செல்வம் என்னும் அதிசயமான காட்டை என்று கடப்பேன்? எ—டி.

வி — ரை: சிந்தாகுலம் — சிந்தை ஆகுலம். மனதின்கண் உள்ள துன்பம்.

இல் — மனைவி. செல்வம் — வாழ்க்கைக்கு வேண்டிய வீடு, காணி, பொன், நெல் முதலிய பல, இனம்பற்றிப் புத்திரரையும் கொள்க. இவைகள் துன்பம் விளைப்பன.

விந்தை + அடவி = விந்தாடவி. விந்தை - அதிசயம். என்னே! ஆச்சரியமான காடு என்றவாறும். அது குறிப் பால் மாயைக்காடு என்னும் பொருள்படும். 'வெம்மாயக் காட்டில் அலைந்தேன்' என்றார் பிறரும். இதுவன்றி, விந்தியமலைக்காடு என்பாரும் உளர். குடும்ப வாழ்வில் சிக்கியவர்களுக்கு வானளாவிய மரங்கள் செறிந்ததும், அச்சத்தை விளைவிப்பதுமான விந்தியமலைஉவமையாயிற்று.

வர + உதயன் = வரோதயன். சிவபிரான் தேவர்க ளுக்குக் கொடுத்த வரப்பிரசாதமாகத் தோன்றியவன். அல்லது கேட்ட வரங்களைக் கொடுப்பவன் எனினுமாம்.

கந்தன் ஆறு திரு உருவங்கள் ஒன்றாய்க் கூடியவன். அது 'சேயவன் வடிவம் ஆறும் திரட்டிநீ ஒன்றாய்ச் செய் தாய் ஆயத னலேகந்த னமெனும் நாமம் பெற்றான்' என் னும் கந்தபுராணக் கூற்றாலும் அறியப்படும்.

முருகன் — என்றும் இளமையுள்ளவன்.

கருணாகரன் — கருணைக்கு இருப்பிடமானவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானகுருநாதா! தேவரீர் காட்டிய மெய்ப்பொருட் காட்சி கைவந்தும், மனைவி மைந்தர் செல்வம் என்ற பற்று இன்னும் முற்றாக விடுபடவில்லையே. நீரேயருள வேண்டும் என வேண்டுவது.

## 34. பெண்களைத் தாயாக நினைக்க

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்கரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே.

ப — ரை: சிங்கார மடந்தையர் தீநெறிபோய் மங்காமல் — தம்மை அலங்காரம் செய்து ஆடவரை வஞ்சிக்கின்ற கணிகைப் பெண்களைச் சேருகின்ற தீயவழியிலே சென்று கெட்டுப்போகாமல், எனக்கு வரம் தருவாய் — எனக்கு வரம் தரவேண்டும்; சங்கராமசிகாவல—பொருதொழில் வல்ல மயிலையுடையவரே; சண்முகனே — அறுமுகப்பரனே; கங்காநதிபால — கங்காசுதனே; க்ருபாகரனே — கிருபைக்கு இருப்பிடமானவனே. எ - று.

பொ — ரை: போர்த்தொழில் வல்ல மயில்வாகனனே, சண்முகநாதா, கங்காசுதனே! கருணைவாரிதியே அடியேன் கணிகைப் பெண்களது மாயவலையிற் சிக்குண்டு, கெட்டுப் போகாமல் வரம்தரவேண்டும். எ - டி.

சிங்கார மடந்தையர், தம்மை விதம் விதமாக அலங்கரித்து ஆசை காட்டுகின்ற வேசியர்கள். (பொருட் பெண்டிர்)

"பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்
இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ யற்று"

என்று திருக்குறளில் வருவதும் காண்க.

வேசியருறவால் கெட்டவர்களை இத்தனை பேரென்று கூறமுடியாது. மாதவியுறவால் கோவலன் பட்டபாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கெட்ட கேட்டையும் சிலப்பதிகாரம் கூறும். இது போன்று இன்னும் பலருண்டு. பெண்மயல் ஞான விளக்கத்தை மயங்கச் செய்வது.

சங்கராமம் - போர். சிகாவளம் - சிகாவலம் என நின்று மயிலையுணர்த்திற்று.

எம்பெருமானே அடியேன்வேசியர் வலையிற் சிக்குண்ணுதிருக்கும்படி நீயே அருளவேண்டும் என்பது அடிகளார் விண்ணப்பம்.

## 35. சரீரவாஞ்சை ஒழிக்க

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே.

ப - ரை: விதிகாணும் உடம்பை விடாவினையேன் - பிரமனால் படைக்கப்பட்ட இந்த நிலையற்ற உடலை விட்டுப் பிரியவிரும்பாத வினையினேன்; கதிகாண-முத்திப்பேற்றை அடையும்படி; மலர்க்கழல் என்று அருள்வாய் - உமது திருவடிக் கமலங்களை என்றைக்குச் சூட்டியருளுவீர்; மதிவாள் நுதல் வள்ளியை அல்லது - அட்டமிப்பிறை போன்ற ஒளி வீசும் நெற்றியையுடைய வள்ளிநாயகியாரையே யல்லாமல்; பின் - பின்னர் வேறு எவரையும்; துதியா விரதர் - துதியாத விரதம் உடையவரே; சுரபூபதியே - தேவலோக நாயகரே. எ - று.

பொ - ரை: வள்ளிநாயகியாரையன்றிப் பிறரொருவரையும் பின்சென்று துதியா விரதமுடைய தேவலோக நாயகா, இந்த உடலைவிட விரும்பாத வினையினேன் முத்திப்பேறடையும்படி உன்திருவடிக் கமலங்களை என்று சூட்டியருள்வீர். எ — டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி — ரை : விதி – பிரமன் அல்லது முன்னைவினை; உடம்பு பிரமனாற் படைக்கப்பட்டது, ஆதலின் விதிகாணும் உடம்பு என்றார். 'கூடு கெடிற் கூடுசெய்து தருவான் உளன்' என்பது திருமந்திரம். 'உடம்பை விடா வினையேன்' என்று உடம்புக்கும் வினைக்கும் தமக்கும் உள்ள சம்பந்தம் தோன்றக் கூறினார். விதிகாணும் உடம்பு – வினையினால் தோன்றிய உடம்பு எனினுமாம்.

ஆகவே, நாம் உடம்பைப் பெற்ற பின்னரே, புண்ணிய பாவங்களை ஈட்டி அவற்றின் பயனை நுகர்கின்றோம் என்ற உண்மை வெளிப்பட்டது. வினையின்றி உடம்பில்லை, உடம் பின்றி வினை இல்லை. "வினைப் போகமே யொரு தேகங் கண்டாய்" என்றார் பட்டினத்தடிகளும்.

உடம்பு தூலம், சூக்குமம், காரணம் என மூன்று வகைப்படும். இம் மூவகை உடம்புகளும் பஞ்சகோசங்க ளுள் அடங்கும். அவை—ஆனந்தம், விஞ்ஞானம், மனோ, பிராணன், அன்னமயம் என்பன. அது,

'மருவா னந்தம் விஞ்ஞானம் மனோ பிராணன் அன்னமயம்
உருவாந் தன்மை யுண்டாய்முன் ஒன்றுக் கொன்றாய் சூக்குமமாய்
வருமாம்...... ............ ........ ....................... .....

என்று அருணந்தி சிவாசாரியர் கூறுவதனாலும் உணர்க.

இனி உடம்பை விடா வினையேன் என்றமையினாலே, ஆன்மாவானவன் உடம்பையே தான் என்று அபிமானித்து அதைப் போஷிப்பதிலேயே வாழ்நாள் முழுவதையும் கழித்துத் தேகாந்தத்திலே இயமன்கையகப்பட்டு மெலிந்து மரணமெய்துவன் என்பது விளங்கிற்று.

உடம்பை விடுதல் மரணாவஸ்தை. மரணத் துன்பம் எல்லாத் துன்பங்களிலும் பெரியது. கதி – நற்கதி, முத்திப் பேறு.

கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய் என்றமை யினாலே, ஞானாசாரியனது திருவடித் தீட்சையே முத்திப் பேற்றைத் தரவல்லது என்ற உண்மை வெளிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடித்தீட்சை, சீடனது சிவத்தியானம் திடப்படச் செய்யப்படுவது. அது, 'கோவாய் முடுகி யடுதிறற் கூற்றம் குமைப்பதன்முன் பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித் துவை' என்னும் அப்பர் சுவாமிகளது வேண்டுகோளில் இருந்தும் பெறப்படும்.

இனி, மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பரமாசாரிய மூர்த்திகள் திருவடித்தீட்சை செய்தமையை, 'பரிவால் மருவு மிங்கிவர் சென்னியில் இருதாள் மகிழ வைத்தனர் மதிநதி முடிப்பார்' என்ற வாதவூரர் புராணக் கூற்றும் உணர்த்தும். ''இணையார் திருவடியென் தலைமேல் வைத் தலுமே துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந் தேன்'' என்பது திருவாசகம்.

இனி, நமது சுந்தரமூர்த்தி சுவாமிகளும், 'எம்மான் றன் அடிக்கொண்டென் முடிமேல் வைத்திடு மென்னும் ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்' என்று கூறு வது காண்க.

'வள்ளியையல்லது பின்துதியாவிரதா' என்றமையி னுலே, பக்குவான்மாக்களை முத்தியிற் சேர்க்கின்ற பரம சற்குருநாதன் தானே என்பதை உலகத்தவர்க்குக் குறிப்பா லுணர்த்தத் திருவுளங் கொண்டு, மேற்கொண்ட அன் பின் ஐந்திணைக் களவொழுக்கத்துட்டலைநின்ற குறிஞ்சித் திணை ஒழுக்கத்தை நாடகமாக நடித்துக்காட்டத் துணைவி யாகக் கொண்டது வள்ளிநாயகியாரையேயன்றிப் பிற ரொருவரையுமன்று என்பது விளங்கிற்று.

துதியா – துதியாத என்று பொருள்படும். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

சுரபூபதி என்றது, சூரபன்மனது கொடுமையால் அழிந்த சுவர்க்கத்தைச் சூரசம்மாரஞ் செய்து, புதுக்கித் தேவர்களைக் குடியேற்றிச் சுவர்க்கச்செல்வனை மீண்டும் அரசனுக்கிய கருணையைக் குறித்தது எனவறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. கடவுளைக் காண

நாதா குமரா நமவென் றரனு
ரோதா யெனவோ தியதெப் பொருளோ
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.

ப — ரை: நாதா — குருநாதா; குமரா — என்குமாரனே; நம என்று — நமஸ்காரம் என்று திருவாய் மலர்ந்தருளி; அரனுர் — சிவபிரான்; ஓதாய் என — பிரமனுக்கு எட்டாத பிரணவப்பொருள் உனக்கு எட்டுமாயின் அதை எனக்குச் சொல்லுவாயாக என்று வினவ; ஓதியது — தேவரீர் உபதேசக் கிரமமாக உரைத்தது; எப்பொருளோ — எத்தகைய பொருளோ அடியேன் அறியேன் (அதை எனக்குச் சொல்ல வேண்டும்); வேதா முதல் விண்ணவர் — பிரமன் முதலிய தேவர்கள்; சூடும் மலர்ப்பாதா — தம் முடிகளில் சூடுகின்ற திருவடிக் கமலங்களை உடையோய்; குறமின் — வேடர் மகளான வள்ளி நாயகியாரது; பதசேகரனே — திருவடிகளை முடிமேற் கொள்பவனே. எ — று.

பொ — ரை: பிரமாதி தேவர்கள் சூடுகின்ற பாத மலரையுடையோய், வள்ளிநாயகியாரின் பாதங்களை முடியிற் சூடிக்கொள்கின்றவரே, 'நாதா குமரா நம என்று' சிவனுர் ''ஓதுவாய்'' என்று தன் திருச்செவியை நல்க ஓதிய பொருளை அடியேனுக்கும் உபதேசித்தருள வேண்டும். எ — டி.

'எப்பொருள்தான்' என்றும் பாடம் உண்டு. ஓதாய் — என்றது ஆசிரியன் வினு.

குமரநாயகன் சூரசம்மாரஞ்செய்து தேவர் சிறை மீட்டல் காரணமாகத் திருஅவதாரம் செய்து கயிலையங் கிரித் திருக்கோயில் வாயிலில் இன்பொடாடி வைகினுனுக. சிவதரிசனத்தின் பொருட்டு வந்த பிரமன் பணிதல் செய்யாது செல்லக்கண்ட கந்தவேள் வருதியென்று அழைத்து 'உன் தொழில் யாது' என வினவினுன். பிரமன், 'நாதனுணையால் அனைத்தும் நான் படைப்பவன்' என்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரவேள், ''அங்ஙனமாயின் உனக்கு வேதங்கள் தெரிந்திருக்கவேண்டும், ஒரு வேதவாக்கியம் சொல்'' என வினவினுன். பிரமன் 'ஓம்' என்று தொடங்கினுன். அது கேட்ட முருகன், 'நில்லு, நீயிப்போது கூறிய ஓம் என்பதன் பொருள் யாது கூறுக' என்ருன். பிரமன் அப்பொருள் அறியாதவனுய்த் திகைத்துநிற்கக் கண்ட குமரவேள் அவனைக் குட்டிச் சிறையிலிடுவித்தான்.

இதையறிந்து சிவபிரான் நந்திதேவரையனுப்பவும், முருகவேள் பிரமதேவரை விடாதமையைக் கண்டு தாமே எழுந்தருளிவந்து பிரமனை விடும்படி வேண்டவும் மைந்தன் விடாமையைக் கண்டு 'மைந்த நின் செய்கை என்னே' என்று சிறிது சீற்றம் செய்யக் கண்ட முருகன் பிரமனை விடுதலைசெய்தான் என்பது வரலாறு.

இச் சந்தர்ப்பத்திலேதான் சிவபிரான், 'அயனுந் தேரு ஓமெனும் மொழிப் பொருள் உனக்குப் போமேல் அதனை எனக்குச் சொல்லுக' என வினவினுர்.

முருகன், ''ஐயனே! தாங்கள் பண்டு பிறரறியாத முறையாய் எம் பிராட்டிக்கு உபதேசித்த உபதேசப் பொருளைப் பிறரெவரும் அறியுமாறு கூறுவது மரபன்று' என, ''எனக்கு உபதேசக் கிரமமாகச் சொல்'' என்று தம் திருச்செவியை நல்கச் சண்முகன் உரைத்தான் என் பதே யீண்டுச் சுட்டப்பட்ட சரிதம்.

இதன் விரிவு வேண்டுவார் கந்தபுராணத்து அயனைச் சிறைபுரி, அயன் சிறை நீங்கு படலங்களில் காண்க.

"ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனுள்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் — ஆங்காரம்
அதுபெற்ருர் அணி யம்பலத்தா னுடல்
இதுபெற்ருர் பிறப்பற்ருர் மண்"

என்பது உண்மை விளக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. தனது அகந்தையை ஒழிக்க

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலேயே
புரிவாய் மனனே பொறையா மறிவா
லரிவா யடியோ டுமகந் தையையே.

ப - ரை: கிரிவாய்விடு – கிரவுஞ்ச மலையின்மீது விட்ட; விக்ரமவேல் – மிகுபலம் பொருந்திய வேற்படைக் கலத்தை உடைய; இறையோன் – அறுமுகத்திறையோனின்; பரிவாரம் எனும் – தொண்டர்படை என்று சொல்லும்படி; பதம் மேவலேயே புரிவாய் – அவனது திருவடியையே அடைய விரும்புவாய்; மனனே – மனமே; பொறை ஆம் அறிவால் – பொறுமை என்னும் சிறந்த அறிவினுல்; அரிவாய் – அரிந்துவிடு; அடியோடும் அகந்தையையே – அடியோடும் அகங்காரத்தை. எ – று.

பொ – ரை: ஏ! மனமே கிரவுஞ்சமலை யிருபிளவாம் படி வலிய வேலைவிட்ட முருகவேளுடைய அடியவரது கூட்டத்துள் ஒருவனும்படி அவனது திருவடி சேர்தலை விரும்புவாயாக. அதற்குச் சாதகமாகப் பொறுமை என்னும் அறிவினுல், அகங்காரத்தை அடியோடும் அரிந்து விடு. எ – டி.

வி–ரை: விக்ரமம்–மிகுபலம், வெற்றிபுரிதல்–விரும்புதல் செய்தல். பதம் மேவல் – என்பதில் அல் – தொழிற் பெயர் விகுதி. பதம் – திருவடிகள்.

நாம் முருகனுடைய தொண்டர்படை என்னும்படி, அவனது திருவடியடைதற்கு அகங்காரமே மிகப்பெருந் தடையாகும். அந்த அகங்காரம் என்னும் தடையை ஈண்டு அரிவாய். அடியோடும் என்ற குறிப்பினுல் ஒரு கொடியாக உருவகம் செய்யப்பட்டது. அதற்கு இயைய, பொறையாம் அறிவு அரிவாளாகும். அகந்தையின் கொடுமையை 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே' என்று குமரகுருபர சுவாமிகள் கூறுவதும் சிந்திக்கற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, தாயுமான அடிகளும்,

'நானென்னும் ஓரகந்தை எவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நாநா வாகத்
தான்வந்து தொடரும்இத்தால் வளரும் துன்பச்
சாகரத்தின் பெருமைஎவர் சாற்ற வல்லர்
.............................................................

என்றும்,

'ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
ஆணவத் தினும்வலிது தான்'

என்றும் கூறுவது சிந்திக்கற்பாலது. 'யான், எனதென்னும் செருக்கு' என்பர் திருவள்ளுவரும்.

ஆகவே, அத்தகைய அகங்காரத்தை நசிக்கவல்லது பொறுமை என்பது அடிகள் கருத்து.

'ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து'

என்றும்,

'பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்'

என்றும் வள்ளுவப் பெருந்தகை பொறுமையின் பெருமையைக் கூறுவதும் காண்க.

முருகவேளைச் சிந்திக்கவும் தவம் செய்யவும் மனத் தெளிவு வேண்டும்.

நான் என்ற அகங்காரம் மேம்பட்டால் அதில் நின்றும் கோபம் தோன்றும். கோபம் தோன்றினால் மனம் கலங்கும். மனம் கலங்கினால், தவம் தியானம் கைகூடாது. ஆதலால் 'பொறையாம் அறிவால் அரிவாய் அடியோடும் அகந்தையையே' என்றார்.

ஆணவமலத்தின் விரிவே அகந்தை. பரிவாரமெனும்படி அவனது பதம் மேவலையே செய் என இயைப்பினுமாம். முருகனுடைய அடியார் என்ற சிறந்த பதத்தை அடைய விரும்புவாயாக எனினும் அமையும். மணிவாசகரும் "அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. பிசாசம் ஒழிக்க

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே.

ப - ரை: ஆதாளியை - இடம்பப் பேச்சுக்காரனும்; ஒன்று அறியேனை - நித்தியமான ஒன்று என்னும் உண்மைப் பொருளை அறியமாட்டாதவனும் ஆகிய என்னை; அறத் தீது ஆளியை - மிகுதியும் தீமையுடையவனை; ஆண்டது - அடிமைகொண்ட கருணைத்திறம்; செப்பும் அதோ - சொல்லும் தரத்ததோ? அன்று. கூதாள கிராத குலிக்கு இறைவா - கூதாள மலரணியும் வேடர் குலமகளாம் வள்ளி நாயகியாரின் மணவாளா; வேதாள கணம்புகழ் வேலவனே - பேய்க்கூட்டங்கள் புகழுகின்ற வேலாயுதக் கடவுளே. எ - று.

பொ - ரை: கூதாள மலரையணிகின்ற வேடர் மகளாம் வள்ளிநாயகியார்க்கு வாய்த்த மணவாளா, பேய்க் கூட்டங்கள் புகழும் வேல்முருகா, தகுதியற்ற என்னைத் தேவரீர் அடிமைகொண்ட கருணைத்திறம் சொல்லும் தரமன்று. எ - டி.

ஆதாளி - இடம்பப் பேச்சுக்காரன். அது பயனற்ற வீண்பேச்சு என்னுந் துணையாய் நின்றது.

ஒன்று என்பது ஈண்டு மெய்ப்பொருளையுணர்த்தி நின்றது. 'ஒன்ருய் உலகனைத்தும் ஆனார் தாமே' என்ற அப்பர் வாக்கும், 'ஒன்று அவன்தானே இரண்டவன் இன்னருள்' என்ற திருமூலர் வாக்கும் அங்ஙனம் வருதல் காண்க.

வி - ரை: கூதாளம் - ஒருவகைப்பூ. கிராதர் - வேடர். குலி - குலத்தை உடையவள்; வேதாளம் - பேய்; கணம் - கூட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதசிவாகம விதிகளை விலக்கிக் கொடுமை செய்கின்ற, அசுரராதிய துட்டர்களை வெட்டிப் பலியிட்டுப் பேய்க் கூட்டம் மகிழ்ந்து உண்ணுமாறு செய்யும் வீரச் செய்கை வெளிப்பட, 'வேதாள கணம்புகழ் வேலவனே' என்றார்.

தேவரீர் அடியேனை ஆட்கொண்டது என் தகுதி நோக்கியன்று, உமது கருணை மிகுதியினால் என்பது பொருள்.

## 39. ஜனனம் எடாதிருக்க

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே.

ப - ரை: மா - மிகப்பெரிய; ஏழ்சனனம்கெட - எழுவகைப் பிறவியும் நீங்குமாறு; மாயைவிடா மூஏடணை - மாயாபந்தம் நீங்காத மூவகையான ஆசைகளும்; என்று முடிந்திடுமோ - என்றுதான் நசித்துப்போமோ அறியேன்; கோவே - சர்வாதிபதியே; குறமின்கொடி - வேடர்குல மகளாம் வள்ளிநாயகியாரது; தோள்புணருந் தேவே - திருத்தோள்களைச் சேருகின்ற தெய்வமே; சிவசங்கர தேசிகனே - சிவன் சங்கரன் என்னும் திருநாமங்களை உடைய சிவபிரானுக்கும் குருவாயிருந்தவனே. எ - று.

பொ - ரை: உலகநாயகா, வள்ளிமணவாளா, சிவ குருநாதா, அடியேனது எழுவகைப் பிறவியும் கெடும்படி, மாயாமயமான, மூன்று ஆசைகளும் என்றுதான் நசித்துப் போமோ அறியேன். நீயே அருள்செய்ய வேண்டும். எ - டி.

வி-ரை: எழுவகைப் பிறப்பாவன: தேவர், மனிதர், நீர் வாழ்வன, விலங்கு, ஊர்வன, பறவை, தாவரம். ஏடணை - ஏஷணு, (ஆசை) மூஏடணை - தார ஏடணை, தன ஏடணை - புத்திர ஏடணை. ஓகாரம் - வினாப்பொருளில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய பிறவிக்கடலைக் கடப்பதற்கு, மூன்று ஆசைகளும் முடியவேண்டும். ஆசையறுதிருந்தால் பிறவி நீங்காது.

மின்கொடி - மின்னற்கொடி போன்ற வள்ளிநாயகியார்.

## 40. மாயை தெளிய

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே.

ப - ரை: வினைஓடவிடும் கதிர்வேல் மறவேன் - மெய்யடியார்களது நல்வினை தீவினை என்கின்ற இருவினையிருளும் அகலுமாறு ஞான ஒளி வீசுகின்ற உன் வேலாயுதத்தை ஒருபோதும் மறவாதவனாகிய நான்; மனையோடு தியங்கி மயங்கிடவோ - மனைவி மக்கள் செல்வம் என்னும் இல்வாழ்க்கையிற் சிக்குண்டு கலங்கி மயங்கலாமோ; சுனையோடு - வள்ளிமலைச் சுனையிடத்தும்; அருவித்துறையோடும் - வள்ளிமலை நீரருவித் துறையிடத்தும்; பசுந்தினையோடும்-பசிய தினைப்புனத்திடத்தும்; இதணோடும் - பரண் பாலும்; திரிந்தவனே - வள்ளிநாயகியாருக்கு அருள் செய்வதுபோல அன்புபற்றிய குறிஞ்சித்திணைக் களவு ஒழுக்க நடனம் செய்து திரிந்தவனே. எ - று.

பொ - ரை: சுனையின்கண்ணும் அருவித்துறையின் கண்ணும் தினைப்புனத்தின்கண்ணும் திரிந்து, வள்ளிநாயகியாருக்கு அருள்செய்த குருநாதா, வினையிருள் அகல ஒளி வீசும் உன் வேற்படையை மறவாதவனாகிய யான், மனைவி மக்கள் செல்வம் என்னும் இல்வாழ்வில் சிக்குண்டு கலங்கி மயங்கலாமோ? இது தகுமோ? எ - டி.

வி - ரை: விடும் கதிர்வேல் என்பதற்கு விடப்படும் கதிர்வேல் என்றும், ஒளிவிடும் வேல் என்றும் பொருள் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரநாயகனது வெற்றிவேலாயுதமானது, ஞான சக்தி சொரூபம் ஆகும். ஆகவே உனது ஞானசக்தியைச் சிந்திக்கின்ற யான், வினைவயத்தனுய்க் கலங்கி மயங்கி மனைவாழ்விற் சிக்குண்டு உழல்வது உன் கருணைக்கும் பெருமைக்கும் தகாது. ஆகவே அவற்றிலிருந்து என்னை விடுவித்து விரைந்து ஆட்கொள்வாயாக என்பது அடிகள் குறிப்பு. ஆன்மாக்களின் வினைகள் நீங்க வேல் அருள் புரியும். ''வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பயமில்லை'' என்பர்.

மனை – மனைவி முதலிய வாழ்க்கைப் பந்தங்கள்.

சுனையோடும், அருவித் துறையோடும், பசுந்தினை யோடும், இதணோடுந் திரிந்தமையைக் கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலத்தில் காண்க. என்னும்மை விகாரத்தாற் றொக்கது.

## 41. நித்திய தேகம் பெற

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

ப – ரை: சாகாது எனையே – இறவாத வண்ணம் என்னையே; சரணங்களிலே காகா நமனார் கலகம் செயும் நாள் – உமது திருவடிகளின்கீழ் வைத்துக் காத்துக்கொள் காத்துக்கொள், இயமன் வந்து கலகம் செய்கின்ற மரண வேளையிலே; வாகா – அழகா; முருகா – என்றும் இளை யோனே; மயில்வாகனனே – மயில்வாகனக் கடவுளே; யோகா – ஞானயோகியே; சிவஞான உபதேசிகனே – பக்குவான்மாக்களுக்குச் சிவஞானத்தை உபதேசிக்கின்ற ஞானகுருநாதனே. எ – று.

பொ – ரை: வாகா, முருகா, மயில்வாகனனே, யோகா, சிவஞான உபதேசிகனே, நமன் கலகம் செயும் நாள், அவன் கையில் சிக்கிச் சாகாது, உன்னுடைய திருவடிகளாகிய புகலிடத்தே இருத்திக் காப்பாற்று. எ–டி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி - ரை: 'எனையே' என்பதில் ஏ பிரிநிலை. தகுதியற்ற தன்னை தகுதியுடைய ஏனையோரில் நின்றும் வேறு படுத்தியே எனையே என்றார்.

அதனால் அவரது தகுதியின்மையும் முருகனது கருணை மிகுதியும் சுட்டப்பட்டது.

குற்றவாளிகளை எமன் தேகாந்தத்திலே வந்து வலிந்து பிடித்துக்கொண்டுபோய் நரகத்திலே தள்ளித் துன்புறுத்துவான். ஆன்மா மரண காலத்திலே உடம்பை விட்டு வெளியேற விரும்பமாட்டாது. எமனே எவ்விதத்திலும் கலகம் விளைத்துத் துன்புறுத்தி வலிந்து பிரித்துக்கொண்டு போவான். அத்தருணத்திலே முருகவேள் மயில்மீதில் வந்து தன் அடியவன் என்று அருள்செய்தால் மரணத்தை வெல்லலாம் என்பது குறிப்பு. சிவஞான உபதேசிகன் - சிவபிரானுக்குப் பிரணவப் பொருளை உபதேசித்தவன் எனினும் அமையும். வாகு - அழகு. காகா - அச்சம் பற்றிய அடுக்கு.

## 42. நின்ற நிலை நிற்க

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலும்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

ப - ரை: குறியை - தியானக் குறியான சிவபரம் பொருளை; குறியாது குறித்து - தற்போதைய முனைப்பால் சுட்டியுணராது திருவருளால் விரிய நிச்சயித்து; அறியும் நெறியை - தன் ஆன்ம அறிவினுள்ளே அறிகின்ற நுண்மையான வழியை; தனிவேல் ஐ நிகழ்த்திடலும் - ஒப்பற்ற வேல் நாயகனான ஞான குருநாதன் விளக்கிக் காட்டிய உடனே; செறிவற்று உலகோடு - உலகத்தவரோடு கலத்தலும் அற்று; உரை சிந்தையும் அற்று - பேச்சும் நினைவும் அற்று; அறிவற்று அறியாமையும் அற்றதுவே - சகலாவத்தையும் கேவலாவத்தையும் நீங்கின. எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ – ரை: தியானப் பொருளாகிய சிவத்தை ஆன்ம போதத்தாற் சுட்டியுணராமல் அருளால் தன் ஆன்ம போதத்துள்ளே விரிய நிச்சயித்து அறிகின்ற நுண்ணிய வழியை வேல்நாயகன் ஆன ஞானகுருநாதன் விளக்கிக் காட்டியருளியவுடனே உலகத்தவரோடு கலத்தலும் அற்றுப், பேச்சும் மனமும் அற்றுச், சகல கேவலங்களும் நீங்கின. எ – டி.

வி – ரை: குறியாது குறித்து அறியும் நெறி–சிவோகம் பாவனை.

"மலமறுப்போ ரான்மாவின் மலரடி ஞானத்தாற்
சிந்தனைசெய் தர்ச்சிக்கச்
சிவனுளத் தேதோன்றித் தீயிரும்பைச் செய்வதுபோற்
சீவன் தன்னைப்
பந்தனையை யறுத்துத்தா ளுக்கித் தன்னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து
பதிப்பனிவன் பாலே... ......"

என்ற அருணந்திசிவாச்சாரியார் கூற்றும் ஈண்டுச் சிந்திக் கற்பாலது.

ஐ – தலைவன். அது "என்ஐமுன் நில்லன்மின்" என்ற திருக்குறளிலும் வருதல் காண்க.

அறிவு–சகலாவத்தை. அதாவது விழிப்புநிலை. ஆன்மா கருவி கரணங்களோடு கூடி விடயங்களையறிவது. அறியாமை – கேவலாவத்தை, அது ஆன்மா கருவி கரணங்களை நீங்கித் தனித்து இருப்பது. உறக்கநிலை.

அவஸ்தைகள் காரணம், காரியம் என இருவகை.

கேவலம், சகலம், சுத்தம் என்பன காரணாவஸ்தைகள்.

காரியாவஸ்தைகள் ஆவன: சாக்கிரம், சொப்பனம், சுழுப்தி, துரியம், துரியாதீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈண்டு அறிவற்றறியாமையும் அற்றதுவே என்ற குறிப் பால் சுத்தாவத்தை சித்தித்தது என்றவாறும்.

சுத்தாவத்தையாவது முத்திநிலே.

இஃது சிவஞானசித்தியாரில் வரும்.

'அறியாமை அறிவகற்றி' என்று தொடங்கும் செய் யுள் போன்றது.

## 43. ஆசாருகி அனுக்கிரகிக்க

தூசா மணியுந் துகிலும் புனேவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே.

ப – ரை : தூசு ஆம் மணியும் – தூய்மை மிக்க முத் தாரமும்; துகிலும் – பட்டாடையும்; புனேவாள் நேசா – அணிகின்ற வள்ளிநாயகியின் காதலரே; முருகா – என்றும் இளேயவரே; நினது – தேவரீரது; அன்பு அருளால் – அன்பு பற்றிய திருவருளால்; ஆசாநிகளம் – என் ஆசையாகிய விலங்கு; துகள் ஆயினபின் – தூள் தூளாய் முற்றிலும் ஒழிந்த பின்னர்; பேசா – வாயினுல் இன்னபடித்தென்று சொல்லமுடியாத; அநுபூதி பிறந்ததுவே – சிவாநுபூதி அடியேனுக்கு உதயமாயிற்று. எ – று.

பொ – ரை : முருகப்பெருமானே! முதிர்ந்த அருளுடன் எனது ஆசையாகிய பந்தத்தை அறுத்து எறிந்தனே. அதனுல் இன்னதென்று எடுத்துரைத்தற்கியலாத ஆனந்த அனுபவம் என்வயம் பிறந்தது.

வி – ரை : தூசு – தூய்மை.

ஆசை – மண், பொன், பெண் என முப்பெரும் பிரி வினே உடையது; ஆன்மாவைக் கட்டுப்படுத்துவது. ஆத லின் விலங்காக உருவகப்படுத்தினுர். அது நுண்டுகளாக அழிந்தபின்னரே பேசா அநுபூதி பிறந்தது என்றமையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞலே, முருகவேட்பெம்மானுடைய அருள் பதிந்து, உள்ளத்திலே உள்ள பற்றுக்களை எல்லாம், அந்த அந்தப் பற்றப்பட்ட பொருள்களின் நிலையாமையையும், அவ்வவற்றின் அநுபவங்களும் முன்பு சுகம்போற்றேன்றி யீற்றில் துன்பமாய் முடிதலையும் உணர்த்தி வெறுக்கச் செய்து, சிவத்தியான நிலையையும் ஈந்து சிவாநுபூதி எய்தும்படி உபகரித்த பேரருளை நினைந்து "நினதன்பருளால் ஆசா நிகளம் துகளாகியபின் பேசா அநுபூதி பிறந்தது" என்ருர்.

அநுபூதி சொல்ல ஒண்ணுதது என்பதற்குச் சான்ருக 'மருவி யிருவரும் புணர வந்த இன்பம் வாயினுற் பேசரிது மணந்தவர் தாமுணர்வர்' என்ற சிவஞானசித்திக் கூற்றும் காண்க.

## 44. குருமந்திரம் பெற

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடும் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழும் கழலே.

ப — ரை: சாடுந் தனிவேல் முருகன் – தன் அடியவர்களின் பகைவரையும் மலமாயா கன்மங்களையும் பொருது அழிக்கின்ற ஒப்பற்ற வேலாயுதக் கடவுளான முருகவேள்; சரணம் சூடும்படி தந்தது – தன் திருவடிக் கமலங்களை என் சென்னிமீது சூட்டித் திருவடித் தீட்சை செய்த பேருபகாரமானது; சொல்லும் அதுஓ – வாயினுற் சொல்லும் தரமன்று; (அத் திருவடிகளின் பெருமை) வீடும் – வீட்டு நெறியிலும்; சுரர்மா முடியும் – தேவர்களது மகிமை மிக்க முடிகளிலும்; வேதமும் – வேதநூற்பரப்பிலும்; வெம் காடும் – வள்ளிநாயகியார் வாழ்ந்த கொடிய காட்டிலும்; புனமும் – தினைப்புனத்திலும்; கமழும் கழல் – மணம் வீசுகின்ற திருவடிகள் ஆகும். எ — று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ - ரை :** அடியவர்கட்கு அருள்செய்கின்ற வேல் வல்ல முருகப்பெருமான் பெருமை மிக்க தன் திருவடிக் கமலங்களைச் சூட்டி அருள்செய்த கருணை சொல்லில் அடங்காதது. எ – டி.

**வி - ரை :** சூரசம்மாரம் பண்ணித் தேவர் சிறை மீட்க ஆயுதமாக இருந்த பெருமை தோன்றச் "சாடும் தனிவேல்" என்றார். தனி–உவமையின்மை. வேல்–ஞானசத்தி, பராசத்தி சொரூபனான முருகவேள் தன் ஞானசத்தியைத் தூண்டி, ஆன்மாக்களது மலமாயா கன்மங்களைத் தொலைத்து, பரிபக்குவம் செய்து திருவடித்தீட்சை பண்ணி முத்தியின்பத்தை ஈயும் ஞானகுருநாதன் என்பது ஈண்டு சிந்திக்கற்பாலது.

முருகன் திருவடிகளோ என்றால் சொல்லமுடியாத பெருமையும் கருணையும் உடையன; வீட்டு நெறிக்கு உரியன; தேவர் முடிகளில் மிளிர்வன; நான்மறைகளில் ஒலிப்பன; வள்ளிநாயகியார்க் கருள்புரிவான் வேண்டி வனத்திலும் புனத்திலும் திரிவன.

அத்தகைய பெருமைமிக்க திருவடிகளைச் சிறியேனுக்குச் சூட்டித் திருவடித் தீட்சை செய்த கருணை சொல்லில் அடங்காது என்று அடிகள் வியக்கின்றார். "கழலென் றருள்வாய்" என்று திருவடித் தீட்சையை வேண்டியவர் ஈண்டு அதனைப் பெற்றதனால் "முருகன் சரணஞ் சூடும்படி தந்தது சொல்லுமதோ" என்று வியந்து விளம்புவது குறிப்பிடத்தக்கது.

## 45. கல்வியில் சம்பாஷிக்க

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப – ரை : கரவாகிய கல்வி உளார் கடைசென்று இரவாவகை – தாம் கற்ற மெய்ப்பொருட் கல்வியைப் பிறர்க்கு ஊட்டாது மறைக்கின்ற கல்விமான்களது கடைத் தலை வாயிலிற் சென்று யாசியாதவண்ணம்; மெய்ப்பொருள் ஈகுவையோ – மெய்ப்பொருட் காட்சியை உபதேசிப்பீரோ; குரவா – குருநாதா; குமரா – குமரநாயகனே; குலிசாயுத – குலிசப்படையை உடையோய்; குஞ்சரவா – தெய்வயானை மணவாளரே; சிவயோக தயாபரனே – அடியார்கட்குச் சிவயோக நெறியை உபதேசிக்கின்ற கிருபாமூர்த்தியே. எ – று.

பொ – ரை : குருநாதா, குமரா, குலிசாயுதா, தெய்வ யானை மணவாளா, சிவயோக தயாபரனே, தாம் கற்ற ஞான நூலை, மறைக்கின்ற புலவர்பாற் சென்று யாசியாத வண்ணம் மெய்ப்பொருளை உபதேசித்தருளுவது எப்போது? எ – டி.

வி – ரை : கரவாகிய கல்வி – மறைத்துவைத்திருக்கும் கல்வி, அது ஞானநூற் கல்வி, மெய்ப்பொருட் கல்வியாகும்.

அறிஞர்கள் மெய்ப்பொருள் நூல்களைப் பொய்ப் பொருள் வேட்கையுடைய சிற்றினமாந்தர்க்கு உபதேசி யாது மறைப்பர்.

அஃது ஏன் என்று கேட்டால் நிலையற்ற மாயா போகங்களை இச்சித்து நிற்பவருக்கு மாயாபோக நூலுப தேசமே பயன்படும். அன்றி ஞானோபதேசம் பயன்படா தாம். ஆதலினாலேதான் அறிஞர்கள் ஞானதாகமுடைய பக்குவர்களுக்கன்றி ஏனையோர்க்கு ஞானநூலுபதேசம் செய்யமாட்டார் எனவறிக.

பக்குவர்களுக்கு அவர்களது பக்குவத்தை நன்றாகப் பரீட்சித்தபின் அன்றி உபதேசியார்கள். இது ஞான நூல் மரபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராணத்துச் சிங்கமுகாசுரன் வதைப் படலத்து 169ஆம் செய்யுளில் 'காமம் தன்னிற் புலந்தவன் றனக்குக் காட்டும் உணர்வெனப் பொடித்த தன்றே' என்று கச்சியப்ப சிவாச்சாரியர் கூறுவதும் ஞான நூலுபதேசம் பக்குவர்க்கன்றிப் பிறர்க்குப் பயன்படாதென்பதற்குச் சான்ருதல் காண்க.

இனி, 'குலிசாயுத குஞ்சரவா' என்பதற்கு குலிசப் படையில் வல்ல இந்திரன் மகளாம் தெய்வ யானைக்கு வாய்த்த மணவாளா என்று உரை கோடலும் ஆம்.

அஃதல்லாமல் 'குஞ்சரவா' என்பதற்கு யானை வாகனத்தை உடையோய் என்று உரைத்து, திருமுருகாற்றுப் படையில் 'கால்கிளர்ந் தன்ன வேழமேல் கொண்டு' என்பதைக் காட்டுபவரும் உளர். ஓகாரம் - வினப் பொருளில் வந்தது.

## 46. மனவருத்தந் தீர

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

ப — ரை: எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ — என்மீது அன்பு செய்கின்ற அன்னையும் எனக்கு அருள் செய்கின்ற பிதாவும் தேவரீரே ஆதலின்; சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனை ஆள் — மனக்கிலேசங்களைத் தீர்த்து என்னை ஆளவேண்டும்; கந்தா — கந்தவேளே; கதிர் வேலவனே — ஒளிவீசுகின்ற வேல் நாயகனே; உமையாள் மைந்தா — உமையம்மைப் பிராட்டியின் மனதுக்கினிய மைந்தா; குமரா — குமரவேளே: மறைநாயகனே — வேத நாயகனே. எ — று.

பொ — ரை: எம்பெருமானே எனக்குத் தாய்தந்தையர் தேவரீரே யாதலின் என் துன்பங்களைத் தீர்த்து ஆள வேண்டும். எ — டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி — ரை: சிறுவர்கள் அறியாமையினுலே செய்த குறும்பு களையெல்லாம் பொறுத்துக்கொண்டு தாய் தந்தையர் அவர்களுக்குத் துன்பம் நேராத வண்ணம் காப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பர். அதுபோலத் தேவரீரும் அடியேன் அறியாமையினுலே செய்த பாவங்களை யெல்லாம் மன்னித்துத் துன்பம் நேராத வண்ணம் காக்கவேண்டும் என்பார்.

'என்தாயும் எனக்கு அருள்தந் தையும்நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்'

என்ருர்.

கந்தன் —ஆறுவடிவங்கள் சேர்க்கப்பட்டவன். குமரன்— என்றும் இளையோன். மறைநாயகன் — வேதங்களுக்குத் தலைவன்.

கதிர்வேல் — மல இருளிரிய ஒளிவிடும் வேல்.

மனக்கவலையை அறிவின் முதிர்ச்சியாலும் அறிவு வடிவாய இறைவனுலுமே தீர்க்க முடியும்.

## 47. ஆனந்த நடனங் காண

ஆரு றையுநீத் ததன்மே னிலையைப்
பேரு வடியேன் பெறுமா றுளதோ
சீரு வருசூர் சிதைவித் திமையோர்
கூரு வுலகங் குளிர்வித் தவனே.

ப — ரை: ஆறு ஆறையும் நீத்து — முப்பத்தாறு தத்து வங்களையும் கடந்து; அதன் மேல் நிலையை — அதற்கு அப் பாலுள்ள மெய்ப்பொருளில் தோய்ந்திருக்கின்ற சுத்தா வத்தை நிலையை; பேரு அடியேன் பெறும் ஆறு உளதோ — பெறுபேருக அடியேன் பெற்றுக்கொள்ளும் வழியும் உண்டோ; சீரு வருசூர் சிதைவித்து — சீற்றமுற்றுப் பொர வந்த சூரபன்மனைச் சங்கரித்து; இமையோர் கூரு உலகம் குளிர்வித்தவனே — தேவர்கள் பக்கமாக நின்று உலகுயிர் களைக் குளிரச் செய்த ஞானகுருநாதா. எ — று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ – ரை: சூரசம்மாரம் பண்ணித் தேவருளம் குளிரச் செய்த ஞான குருநாதா, தேகக்கூறுன முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அப்பாலுள்ள மெய்ப்பொருளினிடத்தே, தோய்ந்திருக்கின்ற சுத்த நிலையான முத்திப் பேற்றை அடியேன்பெற வழியுண்டோ சொல்வீர். எ–டி.

வி – ரை: தத்துவம் முப்பத்தாறுவன; ஆன்மதத்துவம் 24. வித்தியாதத்துவம் 7. சிவதத்துவம் 5;

ஆன்மா ஆனவன் தான் செய்த சிவபுண்ணியத்தினால் இருவினையொப்பு வாய்க்கப்பெற்று, மலபரிபாகம் சத்தி நிபாதம் எய்திய இடத்து, இத் தத்துவ ரூபங்களையும் அவற்றின் செயல்களையும், ஞான குருநாதனுடைய கருணையினால் தெளிந்து, இவையெல்லாம் நமக்கு அந்நியமானவை என்று புறக்கணித்துத் திருவருள் என்னும் உள் ஒளியின் துணைகொண்டு சென்று பரசிவ சொரூபத்திலே தோய்ந்து நின்று சிவபோகத்தை நுகரும் முத்தி நிலையை அடியேன்பெற வழியுண்டோ என்று அடிகள் முருகப் பெருமானை வினவுகின்றார். ஓகாரம் – வினா.

"பூதமும் கரணம் பொறிகள்ஐம் புலனும்
பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்குமா றுளதோ
...............................

என்ற பட்டினத்தடிகள் பாடலும் இதுபோன்றது.

"தாமும் பேணுதத் துவங்கள் என்னும்
பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல"

என்று கண்ணப்பநாயனார் புராணத்துக் கூறுவதும் காண்க.

முப்பத்தாறுவது தத்துவம் நாததத்துவம். அதற்கு அப்பாலுள்ளது அருள்வெளி, அது பராசத்தி மயமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையே சிற்றம்பலம் என்றும் சிற்பரவியோமம் என்றும் அருள்வெளி என்றும் சொல்வர். அவ்வருள் வெளியிலே தான் நடராசப்பெருமான் ஆனந்தக் கூத்தாடுகின்ருன் என்பர் யோகிகள். இந்நிலை சிவத்தியான வாயிலாய் ஒவ்வொருவரும் தத்தம் இருதய கமலத்திலே காணத்தக்கது. அஃதியலாதார் சிதம்பரத்திலே சென்று தரிசிக்கலாம்.

பேரு – பேருக என்ற சொல் கடைக்குறைந்து பேரு என நின்றது. கூறு – பங்கு. பக்கம்.

" அண்ணறன் வீதியா சிருப்பாகும் அணிபடையோர்
நண்ணெருநா லொன்பதாம் அவர்ஏ வலும்நண்ணும் "

என்று பட்டினத்தடிகள் கூறுவதும் காண்க.

## 48. தற்சொரூபங் காண

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே.

ப — ரை : அறிவு ஒன்று அறநின்று அறிவார் – ஏகதேச அறிவு மழுங்கி வியாபக அறிவு விளங்கப்பெருது சலன மற்று நின்று அறிகின்ற அனுபூதிமான்களது ; அறிவில் பிறிவு ஒன்று அறநின்ற பிரானலையோ—அறிவிலே வேருதலும் ஒன்ருதலும் ஆன உபாதி இன்றி நின்ற பெருமான் அல்லவோ ; செறிவு ஒன்று அறவந்து – மாயப்பிரபஞ்சப் பற்று அற்றுப்போகும் நிலைவந்து ; இருளே சிதைய – இருள் மலவலி குன்ற; வெறி வென்றவரோடு – மல மயக்கத்தை வென்ற மெய்ஞ்ஞானிகளோடு; உறும் வேலவனே – கலந்திருக்கின்ற வெற்றிவேலாயுதப் பெருமானே. எ–று.

பொ - ரை : சுட்டறிவு கெட்டு வியாபக அறிவு விளங்கப் பெற்று நின்று, எல்லாம் அறிகின்ற மெய்ஞ்ஞானிகளது விரிந்த அறிவில் வேறுபாடின்றி யசைவற்று நின்ற பெருமானல்லவோ தேவரீர், பற்றுக்கள் எல்லாம் விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு மூல மலவலியும் கெட்டு, மலமயக்கமற்ற மெய்ஞ் ஞானிகளோடு கலந்திருக்கின்ற வேல்நாயகனே. எ – டி.

**வி – ரை:** அறிவு ஒன்று என்றது – ஏகதேச அறிவை. சுட்டறிவு ஏகதேச அறிவு என்பன ஒரு பொருளன.

நின்று அறிவார் – என்றது சலனமற்று நின்று அறி பவர் என நின்றது. ஞானசமாதி கைவந்தவர்.

பிறிவு ஒன்று அற என்றது வேறுபடுதலும் ஒன்றுதலும் இல்லாத பரிபூரணத் தன்மையை என்க. வெறி–மயக்கம். அது நில்லாதவற்றை நிலையுடையவென நினைப்பது.

ஞானவான்களோடு ஒன்றாயிருக்கின்ற எம் பெருமானே, அடியேனுக்கும் அப்படியருள வேண்டும் என்பது குறிப்பு.

நுண்பொருள் – அறிவு ஒன்று அறநின்று அறிதல். கருவிகரணங்களோடு கூடியறியும் சகலமும் அவற்றைக் கூடாமல் நிற்கின்ற கேவலமும் இன்றிச், சுத்தாவத்தை யெய்தி நின்று அறிதல். அறிவில் பிறிவு. ஒன்று அற நிற்றல். ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்றல். கலப் பினால் ஒன்றாயும், பொருட்டன்மையால் வேறாயும், செலுத்துதலால் உடனாயும் எனவறிக.

## 49. தன்னை அறிந்துகொள்ள

**தன்னந் தனிநின் றதுதா னறிய**
**இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ**
**மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்**
**கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே.**

**ப – ரை:** தன்னந்தனி நின்றதுதான் – ஒருவன் தான் கருவி கரணங்களில் நின்றும் கழன்று தனித்தனி நின்ற பேரின்பநிலையை; அறிய – அறியும்படி; இன்னம் ஒரு வர்க்கு இசைவிப்பதுவோ – இன்னும் வேறு ஒருவர்க்குச் சொல்லி வருவித்துவிட முடியுமோ (அன்று என்றபடி); மின்னும் கதிர்வேல் விகிர்தா – ஒளி வீசுகின்ற கிரணங்களை யுடைய வேல்வல்ல விகிர்தா; நினைவார் – தேவரீரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானிக்கின்ற மெய்யன்பரது ; கின்னங் களையும் – துன்பங் களைப் போக்குகின்ற ; கிருபைசூழ் சுடரே – கருணையொளி சூழ்ந்த ஞானபானுவே. எ – று.

பொ – ரை: ஒருவன் தான் தேகோபாதிகளைக் கடந்து தனித்து நின்ற சுத்தநிலையை (முத்திநிலை) வேறொரு வருக்கு அறியுமாறு சொல்லி வருவித்துவிட முடியாது எம்பெருமானே. எ – டி.

வி – ரை: தன்னந்தனி – ஒரு பொருட் பன்மொழி. ஓகாரம் – எதிர்மறை. மின்னும் கதிர்வேல் – பக்தர்களது மல இருளும் இன்னலும் தொலைய ஒளிவீசும் வேல், ஞான சக்தி; விகிர்தன் – வேறுபட்ட வடிவங்களை உடையவன். “வேறுவேறு நின்று உலகெலாம் அளிப்பது வெஃகி ஆறு மாமுகம் பன்னிரு செங்கைகொண் டருள்வோன்” என்று கந்தபுராணத்து வருதலும் காண்க.

கின்னம் – துன்பம்.

## 50. அவா அறுக்க

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

ப – ரை: மதிகெட்டு – அறிவுகெட்டு ; அறவாடி – மிகுதியும் சோர்ந்து ; மயங்கி–மயங்கி ; அறக்கதி கெட்டு – அறநெறியால் வரும் உமது திருவடித் தியானமும் கெட்டு; அவமே கெடவோ கடவேன் – வீணே கெடக் கடவேனோ உமது அடியன் ஆகிய சிறியேன்; நதிபுத்திர – கங்காசுதனே; ஞானசுக அதிப – ஞானத்தால்வரும் சுகத்திற்குத் தலைவ; அதிதி புத்திரர் வீறு அடு சேவகனே – அத்தகைய திதி மைந்தரான அசுரரது வலிமையை யழித்த வீரமூர்த்தியே. எ – று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப - ரை: அறிவு அழிந்து சோர்ந்து மயங்கி, நற்கதியும் இன்றி வீணுகக் கெடக்கடவனே அடியேன். காங்கேயனே, சுகசொருபனே, அத்தகைய அசுரரை அழித்த வீரதீரனே. எ - டி.

வி - ரை: அ திதி புத்திரர் - மேற்சுட்டப்பட்ட மதிகெடுதல் முதலிய கேடுடைய அசுரர்; சூரபன்மன் முதலியோர்.

## 51. நினைத்தபடி தரிசனம் கொடுக்க

உருவா யருவா யுளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

ப - ரை: உருவாய் - உருவப் பொருளாயும்; அருவாய் - அருவப் பொருளாயும்; உளதாய் - உள்ள பொருளாயும்; இலதாய் - காணமுடியாத பொருளாயும்; மரு ஆய் - நறுமணமாயும்; மலராய் - நறுமணம் வீசும் மலராயும்; மணியாய் ஒளியாய் - இரத்தினமாயும் அதன் ஒளியாயும்; கருவாய் உயிராய் - கர்ப்போற்பத்தியாயும் அதனுள் உயிராயும்; கதியாய் விதியாய் - முத்திப் பேறும் அதை அடைவிக்கும் சாத்திர விதியாயும்; குருவாய் - குருவாயும்; வருவாய் - தோன்றுகின்ற எம்பெருமானே; அருள்வாய் குகனே - குகப்பெருமானே சற்குரு மூர்த்தியாக வந்து அடியேனுக்கு அருள்புரிவீராக. எ - று.

பொ - ரை: எல்லாமாக உள்ள எம்பெருமானே அடியேனுக்கு அருள் செய்யவேண்டும். எ - டி.

வி - ரை: அண்டகோடிகளும், அங்கங்குள்ள புவனகோடிகளும், புவனகர்த்தாக்களும், நிலையியற் பொருள் இயங்கியற் பொருள்களான சீவராசிகளும், போகபோக்கியப் பொருள்களும், கலைஞானங்களுமாகிய அனைத்தும் சேர்ந்த தொகுதியை மாயப்பிரபஞ்சம் என்று சுருக்கிச் சொல்லலாம். அத்தகைய மாயப்பிரபஞ்சம் முழுவதும் முருகவேட்பெம்மானுடைய திருமேனியே என்பது இச் செய்யுளின் சாரம். இதுபற்றியே அகிலாண்டகோடிப் பிரமாண்ட நாயகன் என்று சுருதிகள் கூறுவதும் சிந்திக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதற்கு இன்னும் ஒருரை

உருவாய் அருவாய் உளது ஆய் - உருவமாயும் அருவமாயும் உள்பொருளாயும் உள்ள பிரபஞ்சமே திருமேனியாம்படி நின்றும்; இலது ஆய் - பொருட்டன்மையால் அதனைக் கடந்து நின்றும்; மருஆய் மலர்ஆய் - மணமும் மலரும் போலப் பிரபஞ்சத்தில் வியாபித்து நின்றும்; மணியாய் ஒளியாய் - ஒளியும் இரத்தினமும் போன்று உள்ளிருந்தும்; கருஆய் - அப்பிரபஞ்சம் அடங்கியிருந்து தோன்றற்குக் காரணமாய் இருந்தும்; உயிர் ஆய் - சித்துப் பிரபஞ்சத்தை இயக்குதலினால் உயிர்க்கு உயிராய் இருந்தும்; கதிஆய் - அவ்வுயிர்கள் அடைகின்ற முத்திப் பேறும்படி நின்றும்; விதிஆய் - உயிர்வர்க்கம் முத்தியடைவதற்கேற்ற விதிகளை விதிக்கின்ற வேதசிவாகமங்களான சத்தப் பிரபஞ்சமாயிருந்தும் உயிர்களை உபகரித்துப் பக்குவம் வந்த காலத்திலே; குருவாய் வருவாய் - பரமசற்குரு நாதராய் எழுந்தருளி வருகின்ற; குகனே அருள்வாய் - குகப்பெருமானே அடியேனுக்கும் திருவருள் செய்ய வேண்டும். எ - று.

குகன் - குகையிலே வசிப்பவன்.
குகை - ஆன்மாக்களாகிய குகை.

இறைவனை உண்மை நூல்கள் விச்சுவரூபி என்றும், விச்சுவாதிகன் என்றும், விச்சுவவியாபி என்றும், விச்சுவாந்தரியாமி என்றும்; விச்சுவகாரணன் என்றும் கூறுகின்ற உண்மை யீண்டு கூறப்பட்டது.

சடம் சித்தென்று பிரபஞ்சம் இருவகைப்படும். சடம் - அறிவில்லாப் பொருள். சித் - அறிவுப் பொருள். இரண்டையும் சேர்த்து சடசித் பிரபஞ்சம் என்று கூறுவர் அறிஞர். இத்தகைய சடசித் பிரபஞ்சம் அனைத்தும் முருகவேளுடைய திருமேனியே என்பது ஈண்டு சிந்திக்கத் தக்கது. பிருதுவி அப்பு தேயு - உருவம், மற்றவை - அருவம்.

கந்தரனுபூதி மூலமும் உரையும் முற்றுப்பெற்றது.

**அருணகிரிநாத சுவாமிகள் திருவடி வாழ்க.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org